ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3   தனிப்பிரதி அணா 4

மலர் 11   1950, ஏப்ரல்   இதழ் 4

அழிந்துகொண்டிருக்கும் ஆசிரியர் சமூகம்

லோயர் எலிமென்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு பற்றி சட்ட சபையில் கேள்வி கேட்டபொழுது, கனம் கல்வி மந்திரியார், "லோயர் கிரேட் ஆசிரியர்கள் அழிவுபடும் சமூகம் என்றும், அவர்களுக்கு படிப்புக்குத் தக்க மாதிரி சம்பளம் ரூ. 18-ம் பஞ்சப்படி ரூ. 19-ம் சேர்த்து ரூ. 37 கொடுப்பதாக பதிலளித்தார். அவர் சொல்லிய கருத்தை ஆராய்ந்து பார்த்தால் உண்மையாகவே ஆசிரியர் சமூகமே அழிவு பட்டு வருகிறது. ஆசிரியர்களில் பெரும்பாலோர், மனைவி மக்களோடு வாழ்ந்து வருபவர்கள். அவர்களுக்குக் கொடுக்கப் படும் ஊதியம் அவர்கள் உடலோடு உயிரை வைத்துக்கொள்ள அரிசியை மட்டும் வாங்கிக்கொள்ளத்தான் பயன்படுகிறது.

காய்கறி, எண்ணெய், நெய், பால் போன்ற வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற பொருள்களை வாங்க முடிவதில்லை. நோயுற்ற பொழுது, வைத்தியருக்குப் பணம் கொடுத்து சிகிச்சை செய்து கொள்ள வழியற்றுத்தான் இருக்கிறார்கள். இந்தக் குறைந்த ஊதியத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் சமூகம் அழிவுபடுவதைத் தவிர வேறென்ன வழியிருக்கிறது. நாம் கேட்கிறோம் மந்திரியாரை இவர்களுக்கு ஏன் அதிகப்படியான சம்பளத்தை உயர்த்தக் கூடாதென்று? குறைந்த சம்பளத்திற்காக கனம் மந்திரியார் கொடுக்கும் விளக்கம், ஆசிரியர்களின் தகுதி, கல்வித் திறமை என்கிறார். ஆனால், அவர்கள், போதனா முறையில் தேர்ச்சி பெற்றதையும், பிள்ளைகளுக்கு நீண்ட நாட்களாக அவர்கள் போதித்து வரும் திறமையையும், நாட்டின் கல்வியின் முன்னேற்றத்திற்கு அவர்கள் எவ்வளவு முக்யத்துவம் வாய்ந்தவர்கள் என்பதையும் மறந்து லோயர் கிரேட் ஆசிரியர்களை மிகமிக தாழ்த்தி பேசியிருக்கின்றார்—மந்திரியார்.

உதாரணமாக தற்போது ஆரம்பப் பள்ளிகளில் சிலவற்றை ஆதாரப்பள்ளிகளாக மாற்றி வருகின்றனர் அரசாங்கத்தார். ஆதாரப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் கிடைக்காமல் இப்போதே திண்டாடுகின்றனர் — அரசாங்கத்தார். ஆதாரக் கல்வி பாடதிட்டத்தில் துணி நெய்தல், தச்சு வேலை செய்தல், செருப்பு தைத்தல், ஜமக்காளம் நெய்தல் போன்ற பல திட்டங்களை காட்டி யிருக்கின்றனர். அதன்படி ஆரம்பாசிரியர்கள் கிடைக்காதக் காரணத்தால், கைத்தொழில் தொழிலாளர்களை ஆதாரப் பாடசாலைகளில் அமர்த்தப்பட்டால், ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூபாய் 3 அல்லது ரூ. 4 கொடுக்க வேண்டியிருக்கும். தற்காலத்தில் தொழிலாளியின் கூலி ஆசிரியர்களின் ஊதியத்தைவிட நான்கு பங்கு உயர்ந்திருக்கிறது. ஆனால், அவர்கள் கல்வியறிவும் போதனா முறையும், "எலிமெண்டரி கிரேட்" படித்த ஆசிரியர்கள் அளவு உயர்ந்தது அல்ல.

அதுமட்டு மல்ல, சர்க்காரிலும், கம்பெனிகளிலும் ஆசிரியர்கள் அளவு, படிப்புத் திறமையில்லாத பியூன்கள், மற்றக் கீழ்தர வேலைக்காரர்கள், ஆசிரியர்கள் தற்போது வாங்கும் சம்பளத்தைக் காட்டிலும் இரண்டத்தனை சம்பளம் வாங்குகிறார்கள்.

தருமத்திற்காக, நாட்டின் நலத்திற்காக தங்கள் கைப் பொருளைச் செலவு செய்து அரசாங்கத்திற்குப்பதில், தாங்கள் பொருப்பை ஏற்றுக்கொண்டு, பாடசாலைகளை நடத்தும் நிர்வாகிகளை, ஆசிரியர்களுக்கு அதிகப்படியாக சம்பளம் கொடுக்கும்படி

யோசனை கூறுகிறார் மந்திரியார். அத்தகைய யோசனை கேலிக்கூத்தாகும். பொருப்பு, அரசாங்கத்தினுடையதே யொழிய, பாடசாலைகளை தர்ம சிந்தனையுடன் நடத்தும் மானேஜ்மெண்டினுடைய பொருப்பு அல்ல.

(மெயில் உப தலையங்கம் 28-3-50)

*   *   *

மேலே குறித்துள்ள சென்னை மெயில் உபதலையங்கத்தின் சாரத்தை ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியரும் ஆழ்ந்து படித்து ஆலோசிப்பார்களானால், நமது கல்வி அமைச்சர், ஆரம்பாசிரியர்கள்பால் எவ்வளவு கண்ணியமான அபிப்பிராயத்தை வைத்திருக்கின்றார்க ளென்பதைத் தெளிவாக அறியலாம். அவர் சட்டசபையில் சொல்லுகிறார், "நாங்கள் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளிக்கும் ஊதியம் போதாதென்கிறார்கள் அவர்கள், அது அவர்களின் வாழ்க்கைக்குப் போருமோ போதாதோ அது எனக்குத் தெரியாது, அந்த ஆசிரியர்களின் தகுதிக்கு அவ்வளவுதான் தர இயலும்" என்று. வீராவேசத்துடன் பேசுகிறார் மந்திரியார் ஆசிரியர்கள் கூட்டங்களிலும், மகா நாடுகளிலும், இன்றைய மாணவர்களே எதிர்கால பிரஜைகள். புதிய சமுதாயத்தை உருவாக்கும் புத்துலகச் சிற்பிகள் இவர்கள்தான். இன்று இவர்கள் தரப்படும் கல்வியின் தரத்தையும் அளவையும் பொருத்தே யிருக்கிறது இந்த நாட்டின் எதிர்கால வாழ்வு. அவரது மேடைப்பேச்சிற்கும், செய்கைக்கும் எவ்வளவு முன்னுக்குப் பின் முரண்பாடாயிருக்கிற தென்பதைத் தெளிவாக அறியலாம். ஆதாரக் கல்வியின் பெயரால் அதிகம் கல்வித் தகுதியில்லாத போதனாமுறைத் திறமையில்லாத, இன்றைய மாணவர்களை எதிர்கால நல்ல பிரஜைகளாக்கும் தகுதியில்லாத, சாதாரண தச்சுவேலை செய்யும் தொழிலாளி, செருப்புதைக்கும் தொழிலாளி, நெசவு வேலை செய்யும் தொழிலாளி போன்றவர்களுக்குத் தினம் கூலி 2 அல்லது 3 ரூபாயாக, அல்லது மாதச் சம்பளம் 60,90 ரூபாயாகக் கொடுக்க மனமுள்ள மந்திரியார் புத்துலகச சிற்பிகளாகிய ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தது மாதம் 50 ரூபாயாவது ஆதாரச் சம்பளம் கொடுக்க வழிசெய்ய வகையறியாது, சாதாரண கைத்தொழில் தொழிலாளர்களைக் காட்டிலும், அறிவுத் தொழிலாளர்களைத் தாழ்வாக நினைப்பதும், அழிந்துபோகும் சமுதாயம் என்று சொல்வதும், தகுதிக்கேற்ற சம்பளமென்று கேலியாக பேசுவதும், ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்தை நோகத்தான் செய்கிறது.

ஏப்ரல் 4-ம் தேதி சித்தூரில் பேசிய ஒரு கூட்டத்தில், தற்போதுள்ள பாடசாலைகளையே ஒழுங்காக நடத்த இன்னும்

4000 எல். டி. ஆசிரியர்களும், 15000 ஹையர் கிரேட் ஆசிரியர்களும் உடனடியாக தேவை "என்று" பேசியிருக்கின்றார். அழிந்துவரும் சமுதாயமாகிய ஆசிரியர் சமூகத்தில் கனம் மந்திரியார் கூறுவதுபோல, எப்படி இனி தன்மானமுள்ள மக்கள் சுதந்திர நாட்டில் ஆசிரியர்கள் தொழிலுக்கு முன் வருவார்கள் என்று நாம் கேட்கின்றோம். அவர் கொடுக்கும் ரூபாய் 25 ஆசிரியர் தகுதிக்கு அதிகமென்று கருதுகிறார். சாதாரணமாக தபாலாபீஸில் அதிகப்படிப் பில்லாத முத்திரை அடிக்கும் ஊழியன், தபால் கொடுக்கும் தபால் ஊழியன், இன்னும் அரசாங்கத்திலும் கம்பெனிகளிலும் வேலை பார்க்கும் கீழ்த்தர ஊழியர்களெல்லாம் தற்போது ஆசிரியர் வாங்கும் சம்பளம் ரூபாய் 30—ஐ காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம் பெற்று வருகின்றார்கள். இந்த வித்தியாசத்தை பொது மக்கள் காணும்போது ஆசியர்களை கௌரவமாக, கண்ணியமாக எப்படி நினைப்பார்கள்? நடத்துவார்கள்? இவர்களைக் காட்டிலும் நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு உழைக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் எந்த வகையில் தகுதியற்றவர்களென்பது நமக்கு விளங்கவில்லை. இவ்விதம் மந்திரியார் சற்று சிந்தித்து இருப்பாரானால் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தது ரூ. 50-வது கொடுக்க வேண்டுமென்ற எண்ணமாவது அவர்களுக்குத் தோன்றியிருக்கும்.

தற்போது நம் நாடு சுதந்திரம் பெற்றும், பாமர நோயிலிருந்து விடுபடாமல் இருப்பதற்கு முக்கியக்காரணம், ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கைத் திறன் உயர்த்தப்படாததும் ஆசிரியர்கள் வறுமை நோயில் சிக்கி, அல்லல்பட்டு அழிந்து கொண்டிருப்பதுமாகும். இவ்வாறு அழிந்து கிடக்கும் சமுதாயத்தை ஆட்சியாளர்கள் குறைந்தது ரூ. 50-வது ஆதாரச் சம்பளம் கொடுத்தாலல்லாது ஆசிரியர் சமுதாயம் ஒரு நாளும் தலை தூக்கப் போவதில்லை. ஏற்கனவே ஆசிரியர்கள் கிடைக்காமல், ரிடையர்ட் ஆசிரியர்கள் 60-வது ஆனாலும் அமர்த்திக்கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவு போடவேண்டிய நிலையில், சமூகம் அழிந்து தேய்ந்துகொண்டு போய்க்கொண்டிருக்கிறது. இருக்கும் ஆசிரியர்களின் உள்ளத்தையும், புண்பட பேசுகின்றார் மந்திரி மாதவனார். இருக்கும் பாடசாலைகளின் திறமையும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்படாததின் காரணத்தால் இனி ஆட்சியாளர்களின் அலங்காரப் பேச்சுகளினால் ஆசிரியர் ஊதியம் எள்ளளவும் உயரப்போவதில்லை.

"கடந்த நான்கு ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியாளர்களை நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியமான பிரச்சனைகளைக் கவனித்தார்கள் இல்லை. ஆட்சியின் அதிகார போதையில் மூழ்கிக் கிடக்கின்றனர். வேண்டப்படாத, தேவையில்லாத, மக்களால் விரும்பப்படாத காதிதிட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் விரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒரு கோடி ரூபாயை ஆசிரியர் சம்பளங்களின் உயர்வுக்காக கொடுத்திருக்கலாம்." என்பதாக டாக்டர் ஜான் சட்ட சபை உறுப்பினர் சென்னையில் (9-4-50) நடந்த கல்வி மகா நாட்டில் தெளிவாக எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.

காதித் திட்டத்தில் மட்டுமல்ல, இதைப்போன்ற எத்தனையோ பணத்தைப் பாழாக்கும் படலத்தில் இறங்கியிருக்கின்றனர் நமது ஆட்சியாளர்கள். மகாத்மாவின் பெயரால், மக்கள் மயங்கி மஞ்சள் பெட்டியில் மங்களமாக ஓட்டுப் போட்டதின் விளைவுதான் இது. மேல் நாடுகளைப்போல் கேள்வி கேட்க மாற்றுக்கட்சியில்லாமல், மகத்தான மெஜாரட்டி அங்கத்தினர்கள், காங்கிரஸ் கட்சி என்ற பெயரால், சட்ட சபையில் இருக்கும் காரணத்தால், ஏழை, பொது மக்களின் அவலக்குரல் சட்ட சபை வரைக்குங்கூட கொண்டுபோக இடமில்லாமல் போய் விட்டது. தப்பித்தவறி பீகம் அம்ருதீன், ஸ்மாயில் போன்ற எதிர்க்கட்சித் தோழர்கள் ஏதாவது ஆசிரியர்கள் சம்பள உயர்வைப் பற்றி கேள்விகளைக் கேட்டால், நையாண்டி செய்து உட்கார வைத்து விடுகிறார்கள், தங்களுக்கு மெஜாரட்டியுள்ள காரணத்தால், நமது காருண்யமான காங்கிரஸ் மந்திரிகள். டாக்டர் ஜான் எடுத்துக்காட்டியதுபோல ஆட்சியாளர்கள் அதிகார போதையில் இருக்கின்றார்கள். நமது காங்கிரஸ் தோழர்களுக்கு ஆட்சி பீடம் ஏறும் வரையில் ஆரம்ப ஆசிரியர்களின் உதவி, தேர்தலில் கிராமங்கள் தோறும் ஓட்டுகளைச் சேர்க்க மிகமிக அவசியமாயிருந்தது. நமக்கும் ஏதேதோ செய்வதாக வாக்களித்து பதவி பெற்றுவிட்டனர். அவர்கள் ஆசிரியர்களின் பொருளாதார உயர்வுக்கு இனி உருப்படியான சம்பள உயர்வு செய்யப் போவதாக எத்தகைய குறிக்கோளையுங் காணோம். பொது மேடைகளில் நம்மைப் பார்க்கும் பொழுது அவர்களுக்கு மட்டும் பழைய எலக்ஷன் ஞாபகம் மட்டும் வந்துவிடுகிறது. நம்மைச் சமாதானப்படுத்த, பொங்கும் ஆத்திரத்தை அடக்கி, அலங்காரமாக "ஆசிரியர்களே நீங்கள்தான் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு மூல புருஷர்கள். மந்திரிகளாகிய நாங்களெல்லாம் உங்களிடத்தில் படித்து இன்று மந்திரிகளாகவும், சட்ட சபை அங்கத்தி

னர்களாகவும் விளங்குகின்றோம். ஆனால், நாங்கள் உங்களை மறந்துவிடவில்லை. அவசியம் ஆனதைச் செய்கிறோமென்று" போற்றிப் புகழ்ந்து பாமாலைப்பாடி, மாலை மரியாதையுடன் சென்று விடுகின்றனர். மகாநாட்டில் மந்திரியார் நம்மையும் மதித்து வானளாவ புகழ்ந்த வார்த்தைகளே போதுமென்று திருப்தி யடைந்து விடுகின்றனர்—அற்ப சந்தோஷிகளான நமது ஆரம்ப ஆசிரியர்கள். ஆனால், வீட்டிற்குள் நுழைந்ததும் மறுபடியும் வசதியற்ற வாழ்க்கையான வயிற்றுவலி வந்து விடுகிறது. மறுபடியும் ஒரு மகாநாட்டைக் கூட்ட முயற்சிகள் ஆரம்பமாகிறது. மறுபடியும் பழைய பாடம்தான். இம் மாதிரியாக ஆசிரியர் சமூகம் அழிந்துகொண்டிருக்கும் நிலை முற்றும் மாறுபட வேண்டும்.

இந்தக் குடியரசு ஆட்சியில் ஒன்று இனி ஆசிரியர்கள் தன் மான உணர்ச்சியுடன் வாழ்க்கைக்கேற்ற ஊதியத்துடன், கௌரவத்துடன் வாழ முயற்சி செய்ய வேண்டும். மாதம் ஆதாரச் சம்பளம் ரூ. 50 கொடுத்தாலல்லாது இனி ஆசிரியர் வேலைக்கு அடியெடுத்தும் வைக்க மாட்டோமென்று எல்லா ஆசிரியர்களும் ஒன்றுகூடி ஓர் மகா நாட்டைக் கூட்டி தீர்மானித்து 6 மாத காலமாவது நோட்டீஸ் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அப்படி அரசாங்கத்திற்கு பணம் கொடுக்க மனம் இல்லையானால், மனமிருந்தும் செயலாற்ற பணம் தேடி ஆசிரியர்களின் பசியைப் போக்க வழி தெரிய வில்லையானால், இந்த 50 ரூபாய் சம்பாதிக்க தற்போதுள்ள ஆசிரியர்கள் வேறு கௌரவமான வேலையைத் தேடிக் கொள்வதுதான் சிறந்த முறையாகும். வேலை நிறுத்தமோ, ஸ்டிரைக்கோ செய்ய வேண்டிய அவசியமில்லை. வசதியுள்ள ஓர் குறிப்பிட்ட வாலிப ஆசிரியர்கள் ராஜீநாமா செய்துவிட்டாலே போதுமானது. அதுவே நாட்டில் பொது மக்களிடத்தில் ஓர் பரபரப்பை உண்டு பண்ணும். உண்மையாகக் கூறுகிறோம், கையில் ஒரு கோல்லையும், அல்லது ஓர் உளியையும் தூக்கிக்கொண்டு வெளிக் கிளம்பினால் கௌரவமாக நாளொன்றுக்கு ரூ. 3 தாராளமாக, சுதந்திரமாக, சுகமாக சம்பாதித்து வாழலாம். அதுவும் முடியவில்லையானால், வெற்றிலைப் பாக்குக்கடை, டீக்கடை சிறிய தொகை முதல் வைத்து சிறு வியாபாரம் ஆரம்பிக்கலாம். மாதம் 100 ரூபாய்தாராளமாகக்கிடைக்கும். இதில் அவமானமொன்றுமில்லை. சுகமாக வாழலாம். அரசாங்கத்திடத்திலும் அதிகாரிகளிடத்திலும், அடிமை வாழ்வு இனி ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தேவையில்லை. தற்போதுள்ள ஆசிரியர்கள் சமுதாயம் நம்மோடு அழிந்து ஒழிந்துபோகட்டும். நாட்டு மக்கள் அப்பொழுதுதான்

ஆரம்ப ஆசிரியர்களின் அரிய சேவையை நன்கு உணர்வார்கள். பொது மக்கள் ஆட்சியாளர்களை அண்டிக்]கேட்பார்கள். "காங்கிரஸ் தோழர்களே உங்கள் ஆட்சியில் ஆசிரியர் தொழில் அடியோடு அழிந்துபோய் விட்டதே. நாட்டில் பிள்ளைகளுக்குப் படிப்பில்லாமல் திண்டாடுகின்றார்களே. ஏன் நீங்கள் அரசாங்கத்தில் அனாவசிய செலவுகளைக் குறைத்துக்கொண்டு ரூ.50/வது ஆசிரியர்களுக்கு ஆதாரச் சம்பளம் கொடுக்கக்கூடாது என்று கேள்வி கேட்பார்கள். தற்போதுள்ள ஆட்சியாளர்களைக் கேட்டால் கேட்கட்டும் பொது மக்கள். இல்லையானால் அடுத்துவரும் தேர்தலில் வரும் ஆட்சியாளர்களை அவசியம் கேட்கும்படிச் செய்வோம். கேட்கும்படியான பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுத்து, நாமும் சில ஸ்தானங்களைக் கைப்பற்றுவோம். தற்போதுள்ள நமது சீரழிந்த ஆசிரியர் சமூகம் நம்மோடு அழிந்து போகட்டும். வருங்கால இளைஞர் ஆசிரியர் புதிய சமுதாயமாவது குறைந்தது ரூ. 50 ஆதாரச் சம்பளம்பெற்று சுகமாக வாழ விலகிய ஆசிரியர்கள் பாடு படுவோம்.

இதைத் தவிர இந்த காங்கிரஸ் ஆட்சியில் ஆசிரியர்கள் ஒன்றும் செய்யமுடியாது. ஆட்சியாளர்களிடத்திலிருந்து எத்தகைய வாழ்க்கை வசதியையும் எதிர்ப்பார்க்கமுடியாது. கேள்விகள் கேட்டால் கம்யூனிஸ்ட் என்பார்கள். குறையைக் கூறினால் சுயமரியாதைக்காரன் என்பார்கள். நமக்கேன் இந்தத்தொல்லை. எந்தச் கட்சியானாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆசிரிய சமூகத்திற்கு, நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு பாடு படும் எந்தக் கட்சியோ அதுவே நமது கட்சியாகும். நாட்டின் கல்வி வளர்ச்சி எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நாட்டின் பெருமையோ, சிறுமையோ நம்மைச் சார்ந்ததல்ல. நாடாளும் ஆட்சியாளர்களையே சேர்ந்தது. குடியரசு ஆட்சியில். நமக்கு வேண்டாம் பாமாலையும், புகழ்மாலையும். ஆட்சியாளர்களே அணிந்து கொள்ளட்டும். ஆசிரியர்கள் சிந்திப்பார்களாக! அழியட்டும் அடிமை ஆசிரியர் சமூகம், வளரட்டும் வருங்கால இளைஞர் ஆசிரியர் குழாம்.

நிலையில்லா நிர்வாக கிராண்ட்டு

நிர்வாக கிராண்டு சம்பந்தமாக பல பாடசாலை நிர்வாகிகளும், தலைமையாசிரியர்களும் பல கேள்விகளை நமக்கு அனுப்பி இருக்கின்றார்கள். இக்கேள்விகள் கேட்க வேண்டிய கேள்விகள் தான். ஆனால் கேள்வி கேட்கவேண்டிய இடம் ஆரம்பகல்வி காரியாலயம் அல்ல, சட்டசபை அங்கத்தினர்களால் சட்ட

சபையில் கனம் கல்வி மந்திரியாரைக் கேட்கவேண்டியதாகும். தற்போதுள்ள சட்டசபையில் கேள்வி கேட்க அங்கத்தினர்கள் அகப்படாத காரணத்தினால் நமக்கு அந்தக் கேள்விகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆரம்ப ஆசிரியர்கள் சமுதாயம் அழிந்துகொண்டு வருவது போல் எய்டட் பாடசாலைகளின் நிர்வாகஸ்தர்களின் நிலைமையும் நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டு வர ஆரம்பித்திருக்கிறது.

மந்திரி மாதவனார் சொல்லுகின்றார் பாடசாலை நிர்வாகிகளை அரசாங்க கிராண்ட்டு ரூ. 25–டன் ரூ. 5 சொந்த பண்டியிலிருந்து சேர்த்துக்கொடுக்கும்படி உத்தரவு போட்டிருப்பதாகவும், அவ்விதம் 100-க்கு 60 பாடசாலை மானேஜர்கள் உயர்த்திக் கொடுத்திருப்பதாகவும் சட்டசபையில் பதிலளித்திருக்கிறார். ஆம், நிர்வாகிகள் கொடுத்தது உண்மைதான்—இவ்வருடம் நிர்வாக கிராண்ட்டு நிச்சயமாக கிடைக்குமென்ற காரணத்தால், இவ்வருடம் நிர்வாக கிராண்டு நிலையற்றுப் போனதை அறிந்திருந்தால் பல நிர்வாகிகள் கொடுத்திருக்க மாட்டார்கள். கொடுத்துவிட்டு மனுக்களை எழுதி அனுப்பிக் கொண்டிருக்க மாட்டார்கள். அதிகப்படியாக பணம் வசூலாகும் சில பாடசாலைகள் நிர்வாகிகள் மட்டுமே இனி ரூபாய் ஐந்து அதிகப்படுத்திக் கொடுப்பார்களே ஒழிய மற்றவர்கள் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுக்க வசதியும் கிடையாது. அப்படிக் கொடுக்காத காரணத்தால் பாடசாலைகளின் அங்கீகாரம் அறுபட்டுப் போனாலும் நிர்வாகிகளுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. பாடசாலைக்கு விட்டுள்ள கட்டடங்களை பல சரக்குக் கடைகளுக்கும், வீடில்லாமல் திண்டாடும் மக்களுக்கும் வாடகைக்கு விட்டு விடுவார்களேயானால் அவர்களுக்கு நல்ல வாடகையும் கிடைக்கும், தங்கள் கைப்பொருளும் நஷ்டமடையாமல். அரசாங்கத்தாரிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் ஏற்படும் பல தொல்லைகளும் நீங்கி நிம்மதியாக இருப்பார்கள்.

நாட்டின் கல்வி வளர்ச்சிக்கான பெரும் பொறுப்பு, ஒன்றுக்கு மூன்று பங்காக விற்பனை வரி வசூலித்து, அரசாங்கத்தை நடத்தும் ஆட்சியாளர்களுடையதேயல்லாமல் நிர்வாகிகளுடையது அல்ல. வெள்ளையன் ஆட்சியில் பொதுமக்களிடத்திலிருந்து சுமார் 30 - கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது இப்பொழுதோ 60 கோடி ரூபாய் வசூலிக்கின்றார்கள். சுதந்திர ஆட்சியில், அதுவுமலாமல் சுமார் 60 கோடி ரூபாய் வருமா–

(49-ம் பக்கம் பார்க்க.)

குடிமைப் பயிற்சி

(கொ. சந்திரமவுலீச்சுரன், பி. ஓ, எல்; பி. டி.,)

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி ஞனே."

என நன்னூலார் கூறிப் போந்தார். உலகம் மாறிக் கொண்டே வருகிறது. தற்கால உலகத்திற்குத் தேவையான கல்வியைச் சிறுவர் பெறுதல் இன்றியமையாததாகும். கல்வி கற்றல் என்பது பள்ளிக்கூடத்திலேயே நின்று விடுவதில்லை. வாழ்க்கையே பள்ளிக்கூடம்; வாழ்தலே கல்வி கற்றல்; உலகமே ஓர் புத்தகம். நம்மில் ஒவ்வொருவரும் பிறந்தது முதல் இறக்கும் வரை கற்றுக் கொண்டே இருக்கிறோம். கற்றலென்பது வாழ்நாள் முழுவதும் நடைபெறும் செயல். இந்தியா இன்று குடியரசு நாடாய் விளங்குகிறது. இந்நாடு சீரும் சிறப்புமாய் மங்காப் புகழுடன் விளங்க வேண்டுமெனின் நம்நாட்டு மக்கள் நல்ல குடிமக்களாய் விளங்க வேண்டும். இந்திய மக்களுள் பெரும்பான்மையோர் தம் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து வாழ்தல் வேண்டற்பாலதாகும். இக்காலச் சிறுவர் பிற்காலக் குடிமக்களன்றோ! எனவே, சிறுவர்களுக்குக் குடிமைப்பயிற்சியளித்தல் நம்மவர் கடமையாகும். இக்கால ஆசிரியர் பொறுப்பைச் சிந்தித்துப் பாருங்கள்!

குடிமைப் பயிற்சிக்காகக் கல்வி கற்றல் என்பது புதியதன்று. முற்காலத்திலேயே ரூசோ என்ற அறிஞர் எமிலிக்கு வாழும் முறையைக் கற்பிக்க விழைந்தார். நற்குணங்களையும் நல்லொழுக்கத்தையும் பெறுதலே கல்வியின் சீரிய நோக்கமென ஹெர்பர்ட் என்ற பேரறிஞர் கருதினர். புரோபெல் என்பாரும் கல்விச்சாலை சமூகத்தின் சிறு அமைப்பு என்றும், கற்றலென்பது வாழ்தலின் ஒரு கூறு வென்றும் எண்ணினர். பாகலி என்ற ஆசிரியர் சமூகத்தில் சிறந்து விளங்குபவனுக்குரிய இலக்கணங்களைப் பற்றிக் கூறியுள்ளார். சமூகத்தில் திறமையுள்ளவன் பிறருக்குச் சுமையாய் இராமல், தன்னிலையைத் தானே உயர்த்திக் கொள்வதோடு, பிறரையும் மேனிலையடையச் செய்வான்; பிறர் செயல்களில் சிறிதே தலையிடுவான்; சமூகத்தாரவர் நன்மைக்காக உழைப்பான். இதனால், சமூகத்தில் சிறந்து

விளங்கவேண்டுமெனின், ஒருவன் நல்ல குடிமகனாக வேண்டும்.

மனிதன் என்றும் தனித்து வாழ இயலாது, வாழ்க்கையில் இன்பத்தையும் துன்பத்தையும் பங்கிட்டுக்கொள்ள ஓர் துணையை நாடுகிறான். அவன் நலத்திற்காக உழைப்பவர் பலர். அவனுக்காக உழவன் நிலத்தை உழுகிறான்; வியாபாரி பொருள்களை விற்கிறான்; குயவன் பானைகளை வனைகிறான்; வண்ணான் துணிகளை வெளுக்கிறான். இன்னும் எத்தனைபேர் காத்திருக்கின்றனர்? பலரன்றோ! மனிதன் இயல்பாகவே பலருடன் வாழ விழைகிறான். குழந்தை பிறந்து சில ஆண்டுகள் வீட்டில் பெற்றோருடன் பழகுகின்றது. பள்ளியில் சேர்ந்ததும் சிறுவன் பிறருடன் வாழ்கிறான்; பள்ளியை விட்டு நீங்கும் பருவம் வந்ததும் உலக மக்களுடன் நெருங்கிப் பழகுகிறான். இதனால், மனிதன் மக்களுடன் சேர்ந்தே வாழ்கிறான் என்பது வெள்ளிடைமலை.

தனிப்பட்ட மனிதனுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு யாது? சமூகத்தில் உள்ள பலருள் தனிப்பட்ட மனிதன் ஒருவன் சமூகம் காரணமாக ஒருவன் சிறப்படைகிறான். கற்றறிந்த தனிப்பட்ட மக்களால் சமூகம் பெருமையடைகிறது. சமூகம் நன்னிலையில் இருந்தால், அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் நன்னிலையில் இருப்பர். ஒவ்வொரு மனிதனும் சமூகத்திற்காக உழைக்க வேண்டும். இல்லாவிடில் சமூகம் முன்னேற்றமடையாதுபோம். உடலுக்கும், பிற உறுப்புக்களுக்கும் என்ன தொடர்பு காணப்படுகிறதோ அத்தகைய தொடர்பே தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் உள்ளதாகும். நகரத்தில் உள்ள மக்கள் வரி கொடுப்பது அவர்தம் கடமையாம். நகர சபையினர் அளிக்கும் குடிதண்ணீர், விளக்கு, சுகாதாரம் முதலிய வசதிகளைப் பெறுதல் குடிமக்கள் உரிமையாம். எனவே, சமூகத்திற்கும் தனிப்பட்ட மனிதனுக்கும் பிரிக்க முடியாத தொடர்பு உண்டு.

கல்விகற்றல் என்பது தனிப்பட்ட செயலன்று; அது ஒரு சமூகச் செயல். அதுவும் குடிமைப் பயிற்சிக்காகக் கல்விகற்றல் என்று கூறும் பொழுது இது சாலப் பொருந்தும். குடிமைப் பயற்சியளிக்கும் துணைக் கருவிகளில் வீடே முதலிடம் பெறும். வீட்டில் ஒவ்வொருவனும் தாய் தந்தையருடனும், உடன் பிறந்தோருடனும் நன்கு பழகும் வாய்ப்பு உண்டு. மகன் பெற்றோருக்காகச் செய்யும் கடமைகளைச் செய்து, அவனுக்குரிய உரிமையைப் பெற

லாம். தந்தை மகற்காற்று நன்றி
அவையத்து முந்தியிருப்பச் செயல்.
மகன்றந்தைக் காற்று முதவி
யிவன்றந்தைக் யென்னோற்றான்
கொல்லெனுஞ் சொல்.

என்று வள்ளுவர் கூறினார். சிறு பிள்ளைகள் தாய் தந்தையர் சொற்படி நடக்க வேண்டும். கீழ்படிதல் என்பது வீட்டிலிருந்து தான் தொடங்குகிறது. பெற்றோருக்குக் கீழ்படியும் குணமே தனக்கென வாழாமல் பிறர்க்குரியாளராய் வாழும் குணமாக மலர்கிறது. அறிவுடைய பெற்றோர் தம் குழந்தைகளுக்கு நல்ல பயிற்சி கொடுத்தல் அவசியம். குழந்தைகள் சிறுவயதிலேயே நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையில் என்பது பழமொழியன்றோ!

பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் குடிமைப் பயிற்சி பெறுகின்றனர். சாதி, மத வேற்றுமையின்றி யாவரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். தன் பள்ளிக்கூடப் பிள்ளைகள் யாவரும் ஓர் இனம் என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் தோன்றுகிறது. காலையில் எல்லோரும் ஒன்று கூடி ஆண்டவனை வழிபடுவதால் இச்சீரிய எண்ணம் வன்மையுறும். பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கழகங்களை நடத்தும் அமைச்சர்கள் கூட்டங்களைக் கூட்டுவதாலும், சொற்பொழிவாற்றுவதற்குத் தலைவர்களைத் தேடிச் செல்வதாலும், கழகத்தின் அலுவல்களைக் கவனிப்பதாலும் பொறுப்பினை ஏற்று வேலை செய்வோராவர். ஒவ்வொரு வகுப்பிலும் சிறு குழுவின் தலைவர்களையும், பள்ளிக்கூடத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பதால் குடியரசு ஆட்சியில் பயிற்சி பெறுகின்றனர். பிறருக்குச் சேவை செய்தலையே நன்னோக்கமாக உள்ள மாணவர் முதியோருக்கு கல்வி கற்க உதவுவர்; கிராமங்களுக்குச் சென்று விளையாட்டுகளை அங்குள்ளோருக்கு சொல்லிக் கொடுப்பர்; நோய் வாய்ப்பட்டோருக்கு மருந்து கொடுத்து உதவுவர். வகுப்பு அறைகளையும் சுற்றுப் புறத்தையும் துப்புரவாக வைத்துக் கொள்ள மாணவர் பயிற்சி பெறுவர். சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், மாணவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், மாணவர் கழகங்கள் முதலியவை மாணவர்களுக்கு நல்ல பயிற்சியளிக்கின்றன. இத்தகைய ஸ்தாபனங்களில் பயிற்சி பெறுவோர் நல்ல குடிமக்களாய்த் திகழ்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. விளையாட்டுகளும், போட்டிப் பந்தயங்களும் சிறுவர்களுக்கு அளிக்கும் பயிற்சி சாலச்சிறப்புடையது.

நல்ல குடிமக்கள் உள்ள நாடு சிறந்து விளங்கும். அவர்கள் சமூகத்தின் நன்மையைக் கருதுவார்கள். அவர் செய்யும். செயல்கள் பலவகைப்படும்; சிலவற்றைக் கவனிப்போம். நல்ல குடிமக்கள் தெருக்களின் நடுவே நடந்து செல்லாது இரு புறங்களிலும் நடந்து செல்வார்கள்; வாழைப்பழத்தோலையும், கிழிந்த காகிதங்களையும் தெருவிலும் பலர் நடமாடும் இடங்களிலும் எறிய மாட்டார்கள்; கண்ட கண்ட இடமெல்லாம் வெற்றிலைப் பாக்கைத் தின்று எச்சிலை உமியமாட்டார்கள்; வைத்தியசாலையில் மருந்து பெறும் காலத்தும், தபால் நிலையங்களில் கார்டுகள், கவர்கள் வாங்கும் பொழுதும், ரயில் வண்டி நிலையத்தில் பயணச்சீட்டு பெறுங் காலத்தும் 'க்யூ' வரிசையிலே நின்று பிறருக்கு யாதொரு இடையூறுமின்றி நிற்பர்; எங்கும் ஒழுங்கையே விரும்புவார்கள்; நன்னெறியிலே பொருளீட்ட முயல்வார்கள். நற்குடிமைப் பயிற்சி பெறாதவர் நாட்டிற்கும் தங்களுக்கும் தீமையே தேடிக் கொள்வார்கள். பணத்தைச்சம் பாதிக்க விரும்புவோன், இரந்தோ, கடன் வாங்கியோ, திருடியோ, பிறரை ஏமாற்றியோ பொருளீட்டுதல் முறையோ? ஒரு கட்சியினரிடம் பொருள் பெற்று, பிறரை வஞ்சித்தல் தகுமா?

நல்ல குடிமக்கள் உள்ள நாடு நலனுறும். தூய வாழ்க்கையையுடைய பெரியோர் பொறுப்புள்ள உத்யோகங்களை ஏற்றுக்கொள்வர். கல்வியிற் சிறந்த பெரியோர் பொதுமக்களின் நலத்திற்காக உழைப்பார்கள். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்றபண்புடையோரே நாட்டிற்கு நன்மை செய்வோராவர். பொருட் செல்வமுள்ள பெரியோர் பிறருக்காகக் கல்விச்சாலைகளையும், வைத்தியசாலைகளையும் ஏற்படுத்துவர். திறமையுள்ளோர் நாட்டின் தலைவர்களாகத்திகழ்வர்.

குடிமைப்பயிற்சி தனிப்பாடமன்று. ஒவ்வொரு பாடத்திலும் அப்பயிற்சியளிக்கலாம். ஆரம்ப ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் இச்சீரிய பணியில் ஈடுபட்டு நல்ல குடிமக்களைத் தயார் செய்ய இறைவன் அருள், புரிவானாக.

மனிதனும் சூழ்நிலையும்

திரு. தா. ண. சண்முகம் M.A: M. Litt.

மனிதன் சமூகப் பிராணி. எனவே அவன் சிறந்த முறையில் சமூகத்தில் வாழும் மற்ற மனிதர்களின் தன்மை (Personality) அறிந்த அவர்களுக்குத்தக வாழவேண்டும். ஆனால், மனிதர்களின் தன்மையை அறிவது அவ்வளவு எளிய காரியமன்று. பல்லாண்டு அவர்களோடு பல துறையில் பழகினால் அல்லது அவர்களுடைய இயல்புகள் தெளிவுபடா. இவ்வாறு ஒவ்வொருவரோடு பல்லாண்டுகள் பழகி அவர்களது தன்மையை அறிய முயலுவது என்பது இயலாத காரியமே. உளநூலறிஞர்கள் ஆராய்ச்சிகளின் மூலமாகக் குறுகிய காலத்தில் மனிதர்கள் தன்மையை அறியப் பல சிறந்த முறைகளைக் கையாளுகிறார்கள். ராணுவம், சர்க்கார் அலுவலகம் முதலியவைகளுக்கு உயர்தரமான ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தற்போது பெரும்பாலும், உளநூலறிஞர்கள் கண்டறிந்த முறைகளையே கையாளுகிறார்கள். ஆனால் தம் சுற்றுப்புறத்தே வாழும் மனிதர்களின் தன்மை இயல்புகளை (Personality traits) அறிவது என்பது உளநூலறிஞர்கள் கண்டுபிடித்த புதியமுறையன்று. அவர்கள் விஞ்ஞான முறையில் கண்டுபிடித்தார்கள். இம்முறை மக்கள் இவ்வுலகின்கண் தோன்றியதிலிருந்தே பல்வேறு வகைகளாய் இருந்து வந்திருக்கிறது.

ஒருவனது உடலமைப்பைக் கொண்டு அவனது உள்ள நிலையையும் தன்மையையும் நிர்மாணிப்பது தொன்றுதொட்டு இருந்து வரும் ஒரு வழக்கம். ஒருவனுடைய முகஅமைப்பு, முகவாக்கட்டை அமைப்பு, மூக்கு அளவு, கண்கள் அளவு, நிறம், தலைமயிர், தேகக்கட்டு முதலியவைகளின் தன்மைக்கேற்ப அவனது உள்ள நிலையும் அமைந்திருக்கும் என்று கருதிவந்திருக்கிறார்கள். மேலை நாட்டுக் கவியும், நாடகாசிரியருமான உலகம் போற்றும் ஷேக்ஸ்பியர் (Shakespeare) ஜூலியஸ் ஸீஸர் (Julius Ceasar) என்ற நாடகத்தில் ஒரு கட்டத்திலே, ஜூலியஸ் ஸீஸர் வாயிலாக இதுபோன்ற கருத்தை வெளியிடுகின்றார். ஸிஸரோ என்பான் தனக்குத் தீங்கிழைக்க நினைக்கிறான் என்று ஸீஸருக்குத் தெரியாமலிருந்தும் அவன் ஸிஸரோவைக் குறிக்கும்போது "அவன் உலர்ந்த ஒல்லியாக

இருக்கிறான். அவன் ஏதோ எப்போதும் யோசனை செய்து கொண்டிருக்கிறான்; என்னுடன் இருப்பவர்களெல்லாம் பருமனாக இருப்பவர்களாக இருக்கட்டும்'' என்று கூறுகிறார். ஷேக்ஸ்பியருடைய கருத்தாவது, பருமனாக இருப்பவர்கள் 'கபடமற்றவர்கள்' என்பதும், உயர்ந்து ஒல்லியாக இருப்பவர்கள் அறிவு அதிகமுடையவர்கள், ஆதலால் 'சூழ்ச்சி' செய்யும் தன்மை உடையவர்கள் என்பதும் ஆம். இது போன்ற கருத்தை நமது நாட்டிலும் பொதுவாக எல்லா மக்களிடமும் விளங்குகிறது. உயர்ந்து தடித்து வளர்ந்திருப்பவர்களைக் 'கபடமற்றவர்கள்' என்று கருதுவது இயற்கை. கிரஷ்மியர் (Kretschmer) போன்ற ஜெர்மானிய உளநூலறிஞர்கள் குற்றவாளிகளின் (Criminals) மேலும், உளநோயால் பீடிக்கப்பட்டவர்களின் மேலும் நடத்திய ஆராய்ச்சிகளினால் மேலே கூறப்பட்டவைகளைப் போன்ற உண்மைகளை வெளியிட்டார்கள். கிரஷ்மியர் மக்களை அவரவர்களது உடலமைப்புக்குத் தகப் பிக்னிக்வகை (Pyknic Type). அத்தலட்டிக்வகை (Atheletic Type), அஸ்தனிக வகை (Asthenic Type) என மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார். பிக்னிக் வகை மனிதர் வட்டமான சதையுள்ள முகமும், சிறிது சப்பையான சிறிய மூக்கும், பருமனான உடலமைப்பு உடையவர்கள், அவர்கள் சுறுசுறுப்பற்றவர்களாயும், மக்களோடு அதிகம் பழகும் விருப்பமுடையவர்களாயும் நிகழ்கால வாழ்க்கையே நம்பி வாழ்பவர்களாயும் இருப்பார். இந்தப் பிக்னிக் வகையினர் உள்ள நோய்வாய்ப்பட்டால், ஹிஸ்டீரியா (Hysteria) உளக்கோளாறையும், உற்சாகமும், துக்கமும் கலந்து அடிக்கடி தோன்றும் வியாதியையும் (Manic Depressive Psychosis) அடைவார்கள். அத்தலட்டிக் வகையினர் உரமும் பெருத்தது மான எலும்புகளை உடையவர்களாயும் வலிவு வாய்ந்த தசைகளை (Muscles) உடையவர்களாயும் இருப்பார்கள். இந்த வகையினர் சலியாமல் உழைப்பதில் ஆர்வம் உடையவர்கள். வாழ்க்கையின் அடிப்படையான இலட்சியங்களை உணர்ந்து அதன்படி நடப்பவர். மூன்றாவது வகையினரான ஆஸ்தனிக் (Asthenic) வகையினர், ஒல்லியாகவும் உலர்ந்து உயர்ந்தும் இருப்பார்கள். சதைப்பற்ற தட்டையான மார்பை உடையவர்கள். இவ்வகையினர் எப்போதும் தனித்து வாழ விரும்புவார்கள்; தமது இச்சைகளையும், கருத்துக்களையும் எளிதில் வெளியிடாது அடக்கிவைக்கும் இயல்புடையவர்கள். அத்தலட்டிக் வகையினரும் ஆஸ்தனிக் வகையினரும் உள

நோய்களுக்கு ஆளாவார்களா னல், ஸ்கிஸோ பிரேனியா (Schzophrenia)[1] என்ற நோய்க்கே உள்ளாவார்கள்.

மேற் கூறியவை போன்று உடலின் அமைப்பைக் கொண்டோ, உடலின் பல் வேறு பாகங்களின் அளவு, நிறம் தன்மை முதலியவைகள் கொண்டோ தன்மை இயல் புகளை ஊகிப்பது சிறந்த முறை யன்று, என்பதைக் கிரஷ்மிய ருக்குப் பின் வந்த ஆராய்ச்சி யாளர்கள் பலர் நிரூபித்திருக் கிறார்கள். அவர்கள் காட்டிய பல்வேறு காரணங்களில் ஒன்று பிக்னிக் உடல் வகையினர் அஸ்தனிக் உள்ள இயல்புகளை உடையவர்களா யிருந்தார்கள் என்பதும், அஸ்தனிக் வகை யினர் அத்லடிக் வகையி னரது உள்ள இயல்புகளை உடையவர்களா யிருந்தார்கள் என்பது மாகும். இவர்கள் கண்டுபிடித்த உண்மைகளால் உடலமைப்பைக் கொண்டு உள் ளத்தின் இயல்புகளை ஊகிக்கும் வழக்கம் பொருந்தாது என்றே தெரிகிறது.

மக்கள் பிறந்த நாட்களுக் குத் தக அவர்கள் உள்ள இயல் புகளும் அமைகிறது என்பது மற்றொரு கருத்து. நாகரிகத் திலும், பண்பிலும் சிறந்து விளங்கிய பண்டைய கிரேக்க நாட்டிலும் நமது இந்திய நாட்டிலும் மக்களை அவரவர்கள் பிறந்த நாட்களுக்குத் தக, சனி வகையினர், ஞாயிறு வகை யினர், திங்கள், புதன் வகை யினர் என இதுபோன்று வடித்து, அவரவர்களிடம் தனித்தனி உள்ள இயல்புகளும் இருப்பதாகக் கண்டனர். இது போன்று மக்களை அவரவர்கள் பிறந்த நாட்களுக்குக் தக, அந் தந்தக் கோள்களின் (Planets) சக்திக் கேற்ப உள்ள இயல் புகள் அமைகின்றன என்று துணிவாகக் கூற முடியாது. விஞ்ஞான முறையில் இந்தக் கருத்தை நிரூபித்தவர் எவரும் இலர்.

விஞ்ஞான முறையில் மக் களை வகுக்கும் முறையை ஹிப் பாகிரடஸ் (Hippocrates) என்பவரே முதன்முதல் ஆரம் பித்தார். அவரைத்தொடர்ந்து கேலன் (Galen), ஜேம்ஸ் (James) கால்டன் (Galton) கிரஷ்மியர் (Kretshmer) யுங் (Junq) போன்ற அறிஞர் கள் மக்களைப் பலவகைகளில் வேறுபடுத்தித் தன்மை இயல் புகளை நிர்மாணித்தனர்.

காலன் என்பார் மக்களை உட லின் கண் உற்பத்தியாகும் இர சாயனப் பொருள்களுக்குத் தக, (Chemicals) உள்ள இயல்புகள் அமைகின்றன என்று கண்டார். மனிதர்களுக் குள் பல்வேறு இரசாயன உற்பத்திகளில் மாறுதல்கள் இருக்கின்றன. அதன் படி

காலன், ஒருவனது உடலிலே இரத்தம் அதிகமாயிருந்தால் அவனை ஸான்கின் (Sanquine) வகை என்றும், பித்த நீர் அதிகம் இருந்தால் கோளரிக் (Choleric) வகை என்றும், பிளம் என்ற பொருள் அதிகம் இருந்தால் பிளக்மாட்டிக் (Phlegmatic) வகை என்றும், ஸ்பிலின் என்ற பொருள் அதிகம் இருந்தால் மெலன் கோலிக் (Melancholic) வகை என்று வேறு படுத்தினர். அந்தந்த இரசாயனமும் திராவபமும் அதிகமாக உடலில் காணப் படுவது காரணமாகத் தன்மை இயல்புகளும் அமைகின்றன என்பதை வெளியிட்டார். அதாவது, இரத்த ஓட்டம் அதிகம் உடைய ஸான்கின் வகையினர் அதிக உற்சாகத் தோடும், சுறுசுறுப்போடும் இருப்பவர்களென்றும், அதிகமான பித்த நீரை உடைய கோளரிக் வகையினர் எப்போதும் கோபமாக இருக்கும் இயல்புடையவர்களென்றும், பிளக்மாட்டிக் வகையினர் சாந்தமாகவும் ஆனல் சுறுசுறுப் பற்றவர்களாயும் இருப்பார்கள் என்றும், மெலன்கோலிக் வகையினர் வாழ்க்கையில் விருப்ப மற்று எப்போதும் துக்கமாக இருக்கும் இயல்புடையவர்கள் என்றும் வெளியிட்டார். காலன், வாழ்ந்த காலத்தில் உடல்நூல் கருத்து ஒன்று வழக்கிலிருந்தது. 'நரம்புகளிலிருந்தும் ஏதோ திராவக நீர் வெளியாகிறது, அந்த நீரே உடல் இயங்குவதற்குக் காரணம்' என்ற அந்தக் கருத்துக் குத்தக, நரம்பு நீர் அதிகம் உடைய தனிப்பட்ட வகையினரையும் (Nervous Type) ஏற்படுத்தினர்.

காலன் மனிதர்களை வேறு படுத்திய முறை சிறந்தது அல்ல என்று பின் கண்ட ஆராய்ச்சிகள் வெளியிட்டாலும், காலன் கூறியதில் சிறிது உண்மை இருக்கும் என்றே கூறலாம். ஏனெனில் இரசாயனங்கள் குணத்திற் கேற்ப நடத்தையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது யாவரும் அறிந்ததே. இன்றேல், இரசாயனங்களை ஆதாரமாகக் கொண்டதற்போதையமருந்து வகைகள் பிரயோசனமற்றுப் போகவேண்டு மல்லவா? நாம் மதுவை அருந்திய ஒருவனது உள்ள நிலையிலும் நடத்தையிலும் எவ்வளவு மாறுதல்கள் காண்கிறோம். எனவே; நிரந்தரமாகவே அதிகமாக உற்பத்தியாகும் இரசாயனங்களும், திராவகங்களும் உடல் உள்ளிருந்து உள்ள இயல்புகளை மாற்றி அவைகளின் குணங்களுக்குத் தக மனிதனின் நடத்தையையும் நிர்மாணிக்கிறது என்ற கருத்தில் உண்மை சிறிதளவு இருக்கிறதென்றே கூறலாம.

மனிதர்களை மற்றொரு வகையாகவும் வகைப்படுத்தி யிருக்

கிறார்கள்; அது ஸ்தனிக் (Sthenic) வகையினர் ஆஸ்தனிக் (Asthenic) வகையினர், என்பதாகும். ஸ்தனிக் வகையினர் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும் இயல்பையும், கோபத்தை எளிதில் வெளியிடல், பிடிவாதம், காம இச்சை அதிகம் வெளியிடல் முதலிய இயல்புடையவர்களாவர்கள். ஆனால், ஆஸதனிக் வகையினர் பயந்த சுபாவமும், வாழ்க்கையில் விருப்பமற்ற நோக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களும், தம்மையே தாழ்வாக நினைத்துக் கொள்ளும் இயல்புடையவர்களாவர்.

மனிதர்களது தன்மையை அறிய மற்றொரு வகையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது மனிதனின் முக வெட்டைக் கொண்டதாகும். அதன்படி வேட்டை நாய்வகை (Grey-hound type) புல்டாக்வகை (Bull dog type) வாழைப்பழ வகை (Banana type) என ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வகையில் முக வெட்டுக்களுக்குத் தகத் தன்மை இயல்புகள் அமைகின்றன என்பது அடிப்படையான கருத்தாகும். இந்த வகைப்பாடு சிறந்த முறையன்று.

அடுத்தபடியாக, பல்லாண்டு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு மக்களை வேறு வகைப்படுத்தி அமைத்தவர் கார்ல் ஜீ. யுங் (Carl G: Jung) ஆவார். யுங்மக்களை இருவகையாகப் பிரித்தார். அவை இன்ட்ராவர்ட் (Introvert) வகையினர் என்பதும், எக்ஸ்ட்ராவர்ட் (Extrovert) வகையினர் என்பது மாகும். இவர் மக்களை இவ்வாறு வகைப்படுத்தியது அவர்களது முக வெட்டைக் கொண்டோ, அல்லது பிறந்த நாள் பலன்களைக் கொண்டோ அல்லது பொறிகள்வழியாக உள்ளத்தில்எழும் படிவங்களைக் கொண்டோ அல்லது உடலமைப்பைக் கொண்டோ இல்லை. யுங்கின் வகைப்பாடு அவரது உளநூல் முறைக்குத்தக அமைந்திருக்கிறது. அது மக்களுக்கும் பிறப்பியல் பால் அமைந்துள்ள உள்ளச் சக்தியாகிய (Psychic-energy) லிபிடோ (Libido) வின் தன்மைக் கேற்ப அமைந்திருக்கிறது. மக்களில் சிலர் லிபிடோவைச் சூழ்நிலையிலுள்ள பொருள்களின் மேலும் செலுத்தும் தன்மை வாய்ந்தவர்கள். மற்றும் சிலர் லிபிடோவைத் தன் உடல் மேலேயோ அல்லது யீகோ (Ego) மேலேயோ செலுத்திக் கொள்ளும் தன்மை வாய்ந்தவர்கள். லிபிடோவைப் புறத்தேயுள்ள பொருள்களிடத்துச் செலுத்தும் இயல்பு வாய்ந்தவர்களை எக்ஸ்ட்ராவர்ட் வகையினரென்றும், லிபிடோவைத் தமது யீகோ மேலேயே செலுத்தும் இயல்பு வாய்ந்தவர்களை இன்ட்ராவர்ட் வகை

யின ரென்றும் விளக்கினர். எக்ஸ்ட்ராவர்ட் வகையினரது நடத்தையாவது; எப்போதும் தம் போன்ற பிற மனிதர்களோடு வாழ விரும்புதலும், சமூக வாழ்வில் அதிகப் பற்றும், சுலபமாக எல்லோரிடமும் நட்புக்கொள்ளும் போக்கும், சுலபமாக எதையும் நம்பும் குணமும், நாடகம் சங்கீதம் முதலியவைகளில் பிரியமும், வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இன்றியதேசசையாய்த் திரிந்துவரும் இயல்புடையவர்களுமாவார்கள். இன்ட்ராவர்ட் வகையினர் மேற்கூறியவைகளுக்கு எதிர்மறையான இயல்புடையவர்கள். சிறப்பாகத் தன்னலமும், விடா முயற்சியும் அதிகம் உடையவர்கள். நுண்ணறிவிலும் (Intellige-nce) சிறந்து விளங்குவார்கள். மேற்கூறிய இன்ட்ரா-எக்ஸ்ட்ராவர்ட் வகையினரைத் தெளிவுபடுத்தத் தற்போது கல்லூரியில் வாசிக்கும் இருவர்களை ஆராய்வோம்.

கா, என்பவனும் ப, என்பவனும் சகோதரர்கள். இவர்களுக்குள் வயதில் இரண்டு ஆண்டுகள்தான் வித்தியாசம். இந்த இரண்டு சகோதரர்கள்: ஓரிரண்டு முறைகளில் சில நாட்கள் பிரிந்தது தவிர, பிறந்தது முதற்கொண்டு ஒன்றாகவே வளர்ந்து வந்தார்கள். ஆகவே, இவரிருவரும் சூழ்நிலையினின்றும் ஒரே விதப் பலன்களை அடைந்திருக்கிறார்கள். இருவரும் நுண்ணறிவில் சிறந்து சாதாரண வகையை (average)சேர்ந்தவர்கள்ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் குணம் கிடையாது. இவர்கள் கல்லூரியாலும் மற்ற மக்களாலும் பெரிதும் விரும்பப்படுபவர்கள். இவ்வாறு இவர்கள் ஒத்திருந்தாலும், உள்ள அமைப்பிலும், பின்மை இயல்புகளிலும், நடத்தையிலும் மாறுபட்டு இருக்கிறார்கள். கா இன்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்தவன். ப எக்ஸ்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்தவன். இதில் கூர்ந்து கவனிக்க வேண்டியது யாதெனில், அவர்களுடைய பெற்றோர்களும் தனித் தனி வகையைச் சேர்ந்தவர்கள். தாய் எக்ஸ்ட்ராவர்டும், தந்தை இன்ட்ராவர்டும் ஆவார்கள். ஆனல் இன்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்த கா எக்ஸ்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்த தன் தாயை, நிறம், உடலமைப்பு முதலியவைகளில் ஒத்திருந்தான்; எக்ஸ்ட்ரா வர்க்ட் வகையைச் சேர்ந்த ப இன்ட்ராவர்ட் வகைவயச் சார்ந்த தன் தந்தையை ஒத்திருந்தான். இந்த உண்மை முதல் கண்ட கிரஷ்மியர் முறையான உடலமைப்பைக் கொண்டு தன்மை இயல்புகளை நிர்மாணிப்பது என்பது தவறு என்று நிரூபிக்கிறது.

இனி கா, ப சகோதரர்களின் இயல்புகளையும் போக்கையும் ஆராய்வோம்.

ப என்பவன் மக்களிடத்துச் சுலபமாக பழகும் இயல்புடையவன்; புதிய மனிதர்களோடும் எளிதில் நட்புக் கொள்ளும் தன்மைவாய்ந்தவன்; பெருத்த கூட்டங்களில் கலந்துக் கொள்வதில் பயமோ, பீதியோ, வெட்கமோ, அடைவதில்லை. கா ஆனவன் அதிகம் வெட்கமுடையவன். புது மனிதர்களைக் காண்பதோ அல்லது பொது இடங்களுக்குச் செல்வதோ என்றால் விருப்பமின்றித் தயங்கித் தயங்கியே செல்வான். பள்ளியிலிருக்கும் போது ஒரு முறை, பலர் தூண்டுதலுக்கு இணங்கி நாடகத்தில் கலந்து கொள்ளப் பயிற்சியும் எடுத்துக் கொண்டான் ஆனால், நாடகத்தில் அவன் நடிக்க வேண்டிய கட்டம் வந்ததும் அவன் இருக்கும் இடம் தெரியவில்லை. அவ்விடத்தை விட்டு ஓடி மறைந்து கொண்டான். ப விற்குச சுத்தமானதும் பகட்டானதுமான உடை உடுப்பதில் தனிப்பிரியம். ஆனால் கா விற்கோ தான் உடுக்கும் உடைமேல் நாட்டம் கிடையாது. ப விற்குச் சித்திரம், சங்கீதம், சுவையான பண்டங்கள், அழகிய காட்சி முதலியவைகளில் ஆர்வம் அதிகம். கா விற்குத் தன் சகோதரன் இது போன்றவைகளில் ஆர்வம் காண்பிப்பது 'பைத்தியக்காரத்தனம்' என்று ஏளனம் செய்வதும் உண்டு. கா ஆழ்ந்த கருத்துக்களை உடைய காவியங்களிலும், இலக்கியங்களிலும், தத்துவங்களிலும் பிரியம் உடையவன். ப பிற்கால வாழ்க்கையைப்பற்றிக் கவலையின்றிப் பட்டாம் பூச்சி வாழ்க்கை நடத்த, கா ஒவ்வொரு நாளும் தனது பிற்காலத்தைப்பற்றியே நினைத்து அதற்குத் தகத் தனது நடத்தையை மேற்க் கொள்வான். சிற்சில சமயங்களில் உலகத்தின் விசித்திர அமைப்புப் பற்றி ஆராய்வான்; சுலபமாக எதையும் நம்பாது தக்க முறையைக் கொண்டு முடிவு அறிவான். வானத்தை நோக்கிப் பூமியை விட பல்லாயிரம் மடங்கு பெரிதான கோள்களைகளையும், விண் மீன்களையும் பற்றிச் சிந்திப்பான். அவைகளுக்கு முன் தன்னுடைய எளிய நிலைமையைக் கண்டு கவலையுறுவான். இத்தகைய கா வின் நடத்தை ப விற்கு விநோதமாக இருக்கும்; எள்ளி நகையாடுவான். ப விற்கு உள்ளத்தில் எதையும் அடக்கி வைப்பதில்லை; தனக்கு தோன்றியவைகளை யெல்லாம் வெளியிட்டு விடுவான். ஆனால் கா வோ சுலபமாக வெளியிடமாட்டான். ப விற்குக் கடவுள் பக்தி உண்டு; சகுணங்கள் முதலியவைகளில் நம்பிக்கை உண்டு. கா விற்கு இவைகளில் நம்பிக்கை கிடையாது. இவை

கூர விற்கும் ப வுக்கும் உள்ள வேறுபாடுகள்.

மேற்கூறிய இரு சகோதரர்களிடம் காணப்படும் தன்மை இயல்புகளே, பொதுவாக எல்லா எக்ஸ்ட்ராவர்ட் வகையினரிடமும், இன்ட்ராவர்ட் வகையினரிடமும் காணப்படும். இவைகளோடு கூட ஜேம்ஸின் (James) வகைப்பாடான, கடின மனமுடைய வகை (Tou hg minded), இளகிய மனமுடைய வகை (Tender minded) என்பவைகளும் தங்களை உயர்ந்தவராகக் கருதும் உளப்பான்மை யுடைய மக்கள் (Ascendance), தாழ்மையாகக் கருதும் உளப்பான்மை யுடைய மக்கள் (Submissive) வகைபாடுகளும் உளநூலறிஞர்களிடம் உபயோகப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் இன்னும் ஆராய்ச்சி நிலையில் இருப்பதால் திட்டமான முடிவு கூறுவதற் கியலாமல் இருக்கிறது.

இதுகாறும் ஆராய்ந்த பல்வேறு வகைப்பாடுகளில் யுங்கின் வகைப்பாடே பெரும்பாலான அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. யுங் இன்ட்ராவர்ட் எக்ஸ்ட்ராவர்ட் வகைகளோடு இன்னொரு வகையும்நிர்மாணித்தார். அந்த வகையினர ஆம்பிவர்ட் (Ambi vert) என்று அழைத்தனர். இதற்குக் காரணம், பெரும்பாலான மக்கள் இன்ட்ராவர்ட் இயல்புகள், சிலவற்றையும் எக்ஸ்ட்ராவர்ட் இயல்புகள் சில, வற்றையும், உடையவர்களாக இருந்தார்கள். இந்த எக்ஸ்ட்ராவர்ட்—இன்ட்ராவர்ட் முறை நடைமுறையிலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலவேறு உத்தியோகங்களுக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், அந்தந்த உத்தியோகங்களது நிலைமைக்குத் தக, எக்ஸ்ட்ராவர்ட் மனிதரையோ இன்டரவர்ட் மனிதரையோ, தேர்ந்தெடுப்பார்கள். ராணுவத்தில் ஒரு அதிகாரி பதவிக்கு ஆள் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் உயரம் உடற்கட்டு, நுண்ணறிவு, முதலியவைகளோடு அவனிடம் எக்ஸ்டராவர்ட்டின் தன்மை இயல்புகள் இருக்கின்றனவா என்று நோக்குவார்கள். அதே போன்று ஆராய்ச்சித்துறையில் வேலை செய்ய ஆள்தேர்ந்தெடுக்க வேண்டுமானால் நுண்ணறிவு முதலியவைகளோடு, அவனிடம் இன்ட்ராவர்டின் இயல்புகள் இருக்கின்றனவா என்று நோக்குவார்கள். பொதுவாக மக்களுடைய எக்ஸ்ட்ராவர்ட்டின் இயல்புகள் எல்லாம் உடைய மனிதனையோ அல்லது இன்ட்ராவர்ட்டின் இயல்புகள் யாவையும் உடையவனையோ காண்பது எளிது. எக்ஸ்ட்ராவர்ட்டின் இயல்புகள் இன்ட்ராவர்ட்டின் இயல்புகளை விட அதிகம் ஒருவன் உடையவனாக

இருந்தால் அவனையே எக்ஸ்ட்ராவர்ட் என்று கூறுவார்கள்.

இன்ட்ராவர்ட்டுக்கும் இந்த முறை அடுக்கும். அப்படித் தவறி ஒருவர் ஒருவகைக்குரிய எல்லாக் குறிகளையும் உடையவராய் இருந்தால் அவரைப் பிறழ்வானவன் (abnormal) என்றே கூறலாம்.

யூங்கின் முறையை அறிஞர் பின்பற்றுவதால் அது சிறந்த முறை என்று சொல்ல முடியாது. மனித வாழ்க்கை மிகவும் சிக்கலானது. அதை இது போன்ற அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்துவது எளிதன்று. ஏனெனில் மிருகங்களுக்கும் மற்றப் பொருள்களுக்கும், நாம் விரும்பும் சூழ்நிலையை உற்பத்தி செய்து, அதன் பயனாக ஏற்படும் விளைவுகளைத் தெளிவாக ஆராயலாம். ஆனால் மனிதனிடத்து அது போன்ற சோதனைகளை நடத்துவது என்பது இயலாத காரியம். விஞ்ஞானம் முன்னேற முன்னேற, ஒரு வேளை இந்தக் குறையும் தீர்ந்து மனிதனது தன்மையைத் தெளிவுற அறிந்து, அதன்படி சமூகத்தை அமைத்து, மனிதன் உயர்ந்த சமூகத்தில் சிறக்க வாழலாம்.

— கலைக்கதிர்

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100	ரூ.	2-8
ரிகார்ட் ஷீட்டுகள்	(ஆங்கிலம்) 100	ரூ.	2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100	ரூ.	2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்	(ஆங்கிலம்) 100	ரூ.	1-0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்

முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

கூடாத கேலி! நிதான பேச்சு!

(மா. இளஞ்செழியன், B. A (Hons) ஆசிரியர், போர்வாள்)

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—இந்த வாசகத்தைக் கூறுதவர்கள் கிடையாது.

"யாதானும் ஊராமல்! நாடாமல்! என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?" —இந்தத் திருக்குறளை எடுத்துக் காட்டி இதன் அருமை பெருமைகளை சொல்லி மகிழாதவர்கள் அபூர்வம்.

"கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே!"— இந்தச் சின்னஞ்சிறு பாடலைச் சுவைபடக் கூறிவிட்டு, அடடா என்ன அருமை என்ன அருமை என்று தம் வாழ்நாளில் ஒருமுறையாவது கூறிடாதவர்கள் மிகச்சிலர்.

கண்ணுடையவர் என்பவர் கற்றோர். முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதார் என்ற பொன் மொழியை முன்மொழிந்து, பார்மின் பார்மின்! கல்லாதார் முகத்திலிருக்கும் கண்கள், கண்கள் அல்ல. வெறும் புண்கள் என்பதைப் புலவர் சித்தரித்திருக்கும் சிறப்பை ஓர்மின் ஓர்மின் என்று அடிக்கடி கூறிடாத பிரசங்க பூஷணங்களைப் பார்க்க முடியாது.

இன்றைய மாணவர்களே எதிர்கால பிரஜைகள்! புதிய சமுதாயத்தை உருவாக்கும் புத்துலகச சிற்பிகள் இவர்கள் தான்! இவர்களால் தான் நலிந்து கிடக்கும் இந்த நாடு புது வலிவு பெற்றுத் திகழ இருக்கிறது! எனவே இன்று இவர்கட்குத் தரப்படும் கல்வியின் தரத்தையும் அளவையும் பொருத்தே இருக்கிறது இந்த நன்னாட்டின் எதிர்கால வாழ்வு என்று வீரா வேசத்துடன் நிரவுரை ஆற்றிடாத மேடைப் பேச்சாளர் யார் இருக்கிறார்கள்?

கல்லாமையின் நிதான விளைவுகளைப் படம் பிடிக்காத எழுத்தாளர்களோ, படியாதவன் படும் பாடு என்ற தலைப்பில் இல்லாவிட்டாலும், அந்தக் கருத்தினை உட்கொண்ட விதத்தில் கவிதை பல தீட்டிடாத கவிஞர்களோ, படிக்காதவனின் பாமரத்தன்மைச் சித்திர வடிவில் சிங்கார முறையில் வரைந்து காட்டாத ஓவியர்களோ எங்கும் இல்லை.

உண்மையிலேயே, கல்வி— அதன் உடனடித் தேவை— அது இல்லாமையால், நாம் படும் துயரம்—அது கிடைத்து விட்டால் நாடு

பெறக் கூடிய புதுப்பலம்— 'அது' கிடைக்காதவரை வேறு 'எது' கிடைத்தாலும் பயன் இல்லை என்பதற்கான விளக்கம் ஆகியவற்றைப்பற்றி, எல்லோருமே, மிக மிக அக்கறையுடன் பேசத்தான் செய்கிறார்கள்.

சட்ட சபையிலே கூட, வேறு எதை எதையோ பற்றிப் பேசத் தவறி விட்ட எம். எல் ஏ.க்கள் இந்த கல்விப் பிரச்சினையைப் பற்றி மட்டும் நாள் தவறாமல் பேசத்தான் செய்கிறார்கள்.

தினசரிப் பத்திரிகைகள் கூட, அடிக்கடி இதைப்பற்றி ஒரு தலையங்கம் தீப்பொறிபறக்கும் நடையில், படித்தாரைப் பதறவைக்கும் முறையில் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றன.

யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன, யான் வாழ்ந்தால் போதும், என் பெண்டு பிள்ளைகள் சுகமுற இருந்தால் போதும், எம் குடும்பம் எனும் படகு வாழ்க்கைக் கடலில் உல்லாசமான முறையில் இன்ப புரிப் பயணம் செய்து கொண்டிருந்தால போதும் — ஊர் மக்கள் எந்தக் கதியானால்தான் எனக்கென்ன நஷ்டம், நானேன் கவலைப்பட வேண்டும் அதுபற்றி, என்று திருவாய் மலர்ந்தருளும் திவ்விய சொரூபிகள் கூட, ஏனோ தெரியவில்லை. கல்விப் பிரச்சினை என்றால் மட்டும், கொஞ்சம் பரிவு, சிறிதளவு பற்று, சற்றே தாராளம், ஒரு துளி 'தயவு' இவ்வளவும் காட்டுகிறார்கள்.

'கல்வி', இந்த அளவுக்கு மக்கள் கவனத்தைத் தன்பால் ஈர்த்திருப்பது மகிழ்ச்சிக்கும் மனத் திருப்திக்கும் உரியதோர் உயர் நிலைதான். இந்த உயர்நிலையை எண்ணிப் பார்க்கும் எவர் தம் உள்ளமும், ஆநந்தத்தால் துள்ளிக் குதித்துக் களிப்புக் கவிதை பாடிடாமல் இருக்க முடியாது என்பதும் உண்மைதான். நாடெங்கும் பாய வேண்டும் கல்வி நீரோடை என்பதிலே அனைவருக்குமுள்ள இந்த ஆர்வம், இந்த நாட்டிற்குச் சிறப்பானதோர் எதிர்காலம் வர இருக்கிறது என்ற உண்மையை விளக்கும் ஓர் ஆதாரம் என்பதும் மெய்தான். ஆம்! இவ்வளவும் உண்மை, முழு உண்மை!

ஆனால், இவ்வண்ணம் அனைவராலும் ஏகோபித்த குரலில் போற்றிப் புகழப்படும் கல்வியறிவினை, பால் மணமும் மாறாத பச்சிளம் குழந்தைகட்கு ஊட்டிடும் அரும் பணியை, அளவுக்கு மீறிய கஷ்ட நஷ்டங்களுக்கிடையே ஆற்றிவரும் ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு. நம் சமுதாயமும் சர்க்காரும் அளித்திருக்கும்

மதிப்பு — மரியாதை — புகழ் — போற்றுதல் — ஊதியம் — வாழ்க்கை வசதி — வளமாக வாழ்வதற்கான வாய்ப்பு இவை யாவும் எவ்வளவு குறைவு 'என்பதை எண்ணிப் பார்க்கும் போதுதான், இவ்வளவு பெரும் கல்வியறிவின் சிறப்பு சீர்களைப் பற்றியும் அருமை பெருமைகளைப்பற்றியும் பேசுவது ?அவ்வளவும் வெறும் வார்த்தை அலங்காரமே தவிர, உள்ளத்தின் உள்ளிருந்து உருண்டோடி வரும் உண்மை உரைகள் அல்ல என்பது தெற்றெனத் தெளிவாகிறது — நம் உள்ளமும் சோகச் சிந்தனையில் ஆழ்கிறது.

ஆரம்ப ஆசிரியர்கள்—இவர்கள் ஆற்றிடும் பணி எவ்வளவு உயர்வானது! இவர்கட்குத் தரப்படும் ஊதியம் — அது எவ்வளவு குறைவானது! கல்வியின் சிறப்பைப் பற்றிய சிந்து பாடுவோர் — இவர்கள் எவ்வளவு ஏராளம்! ஆனால் அந்தச் சிறப்பான கல்வியைச் செழிப்பாக இருக்கும்படி செய்திடும் சிலர்கள் — அவர்கட்கு இவர்கள் தரும் மதிப்பு எவ்வளவு மட்டமானது! இவர்கள் தம் சொல்லுக்கும் செயலுக்குமிடையே இருக்கும் தூரம்—அது எவ்வளவு அதிகம்! ஆனால், இவர்கள் தம் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே இருக்கும் பாசம் — அது எவ்வளவு கொஞ்சம்!

கல்வியின் பெருமை, கல்வியின் அருமை, கல்வியின் அவசியம், கல்வியின் உயர்வு, கல்வியின் ஆழம். கல்வியே கருந்தனம், கல்விதான் வாழ்க்கை வயலை வளமாக்கும் நல் உழவன்—அதுதான் நம் சமுதாயக்கேடுகளைக் கல்லியெறிவதற்கான ஒரே ஒரு கருவி என்று என்னென்ன பேசுகிறார்கள். இந்த சர்க்காரும் மக்களும்! கடைசியில், இந்தக் கல்விப் பயிரை வளர்த்திடும் துவக்கப்பள்ளி ஆசிரியர்கட்கு, இவர்கள் தரும் அன்பும் ஆதரவும் எவ்வளவு சுருக்கம்!

சட்டசபையில் இந்தக் கிழமை, கண்ணியமே உருவான நம் கல்வி அமைச்சர் மாதவனார், ஆரம்ப ஆசிரியர்கட்கு சர்க்கார் அளிக்கும் ஊதியம் எவ்வளவு எவ்வளவு என்பதை புள்ளி விவரத்துடன் விளக்கி இருக்கிறார்—அதைப் படித்த பிறகு, ஆரம்ப ஆசிரியர்களை இந்த வேதனை மிகு நிலைமையில் இருக்க வைத்துக் கொண்டு ஏன் தானோ மக்களுடன் கூடிக்கொண்டு இந்த அமைச்சர்களும் கல்வியின் பெருமையை வேறு அடிக்கடி பேசித் தொலைக்கிறாகள் என்ற எண்ணம் நல்லறிவாளர் எவருக்கும் எழாமல் இருக்க முடியாது.

அமைச்சர் மிகத் தாராளமாகத்தான் கூறியிருக்கிறார்—நமக்கோ வெளியே சொல்ல

வெட்கமாக இருக்கிறது-இந்த சர்க்கார் ஏழை ஆரம்ப ஆசிரியர்கட்குத் தரும் மாத ஊதியம் ரூபா 18.

பதினெட்டு வெண் பொற் காசுகளை எண்ணித் தருகிறார் இந்த அமைச்சர் ஆரம்ப ஆசியர்கட்கு — அதே சமயத்தில் இவர் நாடெங்கும் சென்று சென்று ஓங்கவேண்டும் கல்வி — திக்கெட்டும் பரவவேண்டும் அறிவு என்று பேசாமலாவது இருக்கிறாரா என்றால் இல்லை! பேசிக்கொண்டு வேறு இருக்கிறார்! அதுவும் ஓயாமல் பேசிக்கொண்டு இருக்கிறார்! பேசிக்கொண்டு மட்டும்தானா இருக்கிறார், கிடையாது — திறந்த வெளி என்ற பள்ளிக்கூடத்தில், பொதுக்கூட்டங்கள் என்ற வகுப்புகளை நடத்தி பாமரர்கள் என்ற மாணவர்கட்கு, பகுத்தறிவு என்ற நற்கல்வியைப் புகட்டிவரும் சுயமரியாதைத் தோழர்களை ஏசிக்கொண்டும் இருக்கிறார்!

சம்பளம் பதினெட்டுத் தருகிறீரே போதுமா, கல்வி ஓங்க வேண்டும என்று உரத்த குரலில் ஊரெங்கும் பேசுகிறீரே—பேசிவிட்டு, இப்படிச் செய்கிறீரே நியாயமா என்று சட்டசபை உறுப்பினர்கள் கேட்டுவிடவில்லை. ஆனால் கேட்டுவிட்டால் என் செய்வது என்று எண்ணிக்கொண்டார் கனம் மாதவனார். எண்ணியவுடன் கூறினார், "மாத சம்பளம் ரூபாய் 18 தருவதோடு நிற்கவில்லை நாங்கள், பஞ்சப் படி வேறு ரூ 19 தருகிறோம்" என்று!

சம்பளம் 18-பஞ்சப்படி 19-இவ்வளவு தருகிறோம் தருகிறோமே போதாதா, இதை விடவா அதிக ஊதியம் தர வேண்டும், என்ற தோரணையில் பேசி இருக்கிறார் பேரமைச்சர். 18 ஐயும் 19 ஐயும் கூட்டினால் வரும் தொகை ஏதோ மிக மிக அதிகம் என்பது அவர் நினைப்புப் போலும், அந்த அரிய அமைச்சருக்கு அன்புடனும் பணிவுடனும் கூற ஆசைப்படுகிறோம். 18 ஐயும் 19 ஐயும் கூட்டினால் வரும் தொகை 100 அல்ல 150-ம் அல்ல, 200 அல்ல, 1500-ம் அல்ல மாபெரிய தொகை என்றெண்ணி மகிழ! அந்த இரண்டு எண்களின் கூட்டுத் தொகை 37 தான்! சந்தேகமிருந்தால் அமைச்சர் கூட்டிப் பார்க்கட்டும். அவருக்கு நேரமில்லா விட்டால், அவருடைய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையாவது கூட்டிப் பார்த்துச் சொல்லக் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும். 18-ம் 19-ம் சேர்ந்தால் ஒரு பெருந் தொகை உருவாகிவிடாது. கேவலம் 37 தான் கிடைக்கும். அதே நேரத்தில் நினைவு படுத்திக் கொள்ளட்டும் அமைச்சர். அமைச்சர் என்ற முறையில் அவர் மாதா மாதம் பெறும் ஊதியம் பலவித அலவன்சு

கள் உள்பட ரூ 1500! அந்த 1500-ல் எத்தனை எத்தனை 37 கள் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் சொன்னால் கூட நம்ப மாட்டார் அமைச்சர்—அவரே கணக்குப் போட்டுப் பார்த்து அறிந்து கொள்ளட்டும். இந்த 37 காசுகளை வைத்துக் கொண்டு ஆரம்ப ஆசிரியர்கள் எப்படித் தங்கள் குடும்பத்தை நடத்திச் செல்ல முடியும் இந்தக் காலத்தில் என்பதை!

முப்பத்தேது தருகிறோம் முப்பத்தேழு! பெருமையுடன் கூறுகிறார் மலையாளத்து மாவீரர்! கூறுவதோடா நிற்கிறார், இதைவிட இன்னும் என்ன செய்ய முடியும் என்று கூசாமல் கேட்கவும் செய்கிறார்!

முப்பத்து ஏழு! ஒப்புக் கொள்கிறோம், இந்தத் தொகையைக் கொண்டு, ஆரம்ப ஆசிரியர்களும், அவர்கள் தம் குடும்பத்தினரும் சாகாமல் இருக்க முடியும்—ஆம்! அதுதான் நடக்கிறது இப்போது-ஆனால், அவர்கள் இத்தொகையைக் கொண்டு வாழமுடியாது. நிச்சயமாக முடியாது.

சாகாமல் இருப்பது என்பது வேறு. வாழ்வது என்பது வேறு. சாகாமல் இருப்பவர்கள் அனைவரும், "வாழ்கிறார்கள்" என்று கூறிவிட முடியாது. உயிர், உடலில் ஒட்டிக்கொண்டிருப்பதற்குத் தேவையான சிறிதளவு உணவு மட்டும் கிடைத்துவிட்டால் போதும், ஒருவன், மரணத்தின் அணைப்பிலிருந்து தப்பிவிட முடியும். ஆனால், அந்தக் காரணம் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு அவன் வாழ்கிறான் என்று கூறுவது ஒருக்காலும் பொருந்தாது.

சாகாமல் இருப்பவன் வாழவும் வேண்டுமானால், அவனுக்கு, இருக்க நல்லதோர் இடம் வேண்டும். குடும்பத்தைக் காப்பாற்றப் போதுமான திறமை வேண்டும். பிள்ளைகளைப் படிக்க வைக்க வசதி வேண்டும். குடும்பத்தார் அனைவருக்கும் நோய் வந்தால் அதனைப் போக்கும் சக்தி வேண்டும். எல்லோருக்கும் தேவையான உடை முதலிய அத்தியாவசியப் பொருள்களை வாங்கித்தரும் நிலை வேண்டும். இவ்வளவுக்கும் தேவையான பணம் போதுமான அளவு இருந்தால் மட்டும்தான் ஒருவன் வாழ்பவன் என்ற பட்டியலில் இடம் பெற இயலும்.

இந்த அளவுகோலைக் கொண்டு அளந்து பார்த்தால், மாவீரர் மாதவனார் தரும் மாபெரும் 37 போதுமா ஆரம்ப ஆசிரியர்கட்கு? வாழ முடியுமா அவர்கள் இத்தொகையைக் கொண்டு? இந்த முப்பத்தேழு காசுகளை வைத்துக்கொண்டு வாழும் வாழ்வு,

வாழ்வு என்ற சொல்லையே கேலி செய்யும் ஒரு வேதனைச் சித்திரமாக இருக்குமேயன்றி அதன் பெயர்தானய்யா வாழ்வு வாழ்வு என்ற சொல்லையே கேலி செய்யும் ஒரு வேதனைச் சித்திரமாக இருக்குமே யன்றி அதன் பெயர்தானய்யா வாழ்வு என்று கல்வி அமைச்சர் மாதவனாரேதான் கூறினாலும் ஒப்புக்கொள்ள முடியுமா நம்மால் அதை? ஒப்புக்கொண்டால், பிறகு, நமக்கும் சிந்திக்கும் திறம் உண்டு என்று நாம் சொல்லிக்கொள்வதிலே பொருள்தான் உண்டா?

எவரும் அறிவரே, இந்த 37, குடும்பத்தின் **அரிசிக்கவலை** ஒன்றைத்தான் தீர்க்குமே தவிர வேறு கவலைகள் எதனையும் போக்காது என்பதை!

அனைவருக்கும் தெரியுமே இந்த 37-ஐக் கொண்டு ஓர் ஆரம்ப ஆசிரியர் வாழ்வது என்பது நடவாத செயல் என்பது!

என்றாலும் எழில்பட மொழிகிறாரே அமைச்சர் முப்பத்தேழு தருகிறோம்-என்றாலும் முணுமுணுக்கிறார்கள் இந்த ஆசிரியர்கள் - ஏனோ தெரியவில்லை என்று!

அனைவருக்கும் தெரிந்த உண்மை கல்வி அமைச்சர் அவர்களுக்கு மட்டும தெரியவில்லை என்றால் எப்படி நம்புவது நாம் இதை?

37 காசுகளைத் தந்துவிட்டு இதற்குப் பெயர்தான் சம்பளம் என்று கூறும் அமைச்சர் பெருமை வேறு அடைகிறாரே இத்தகு நிலைமை நீடித்திருப்பதில்?

முறையா?

தகுமா?

நியாயந்தானா இப்போக்கு?

நாடு நலமுறுவதற்கான வழியா இது?

இவ்வளவு வேதனை தரும் வாழ்க்கையை ஆரம்ப ஆசிரியர்கட்கு அளிக்கும் இந்த அருமை காங்கிரஸ் ஆட்சியாளர்களும் சரி, அவர்களைப்போலவே பேசி, அவர்களைப்போலவே செயல் புரியும் ஏனைய எவரும் சரி, இந்த நிலையில் கல்வியின் கவினுறு சிறப்புகளைக் குறித்து தினம் தினம் 'போற்றித் திரு அகவல்'வாசித்துக்கொண்டிருப்பது ஏதுக்கு?

கல்வியின் சிறப்பையும் சீலத்தையும் சுவைபட மொழிவது ஒருபுறம், ஆனால் கல்வியின் சிறப்பை நடைமுறையில் நிலைநாட்டுவோரைக் கீழே வீழ்த்தும் பாதகம் மற்றோர் புறம்.

ஏன் இந்த இரட்டை வாழ்வு?

என்ன பயன் தரும் இந்தப் போக்கு?

மற்றவர்களை விட, ஆள வந்தார்கள்தான் இதனை, மிக முக்கியமாக சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்?

ஆரம்ப ஆசிரியர்கட்கு ஆட்சியாளர்களால் தரப்படும் 37 ரூபா என்ற மிகச் சிறு தொகை, அந்த ஆசிரியர்களையும் அவர்களுடைய அரும் பணியையும், ஆட்சி பீடத்தினர், எவ்வளவு அலட்சியமாகவும் கேவலமாகவும் மதிக்கிறார்கள் எனும் உண்மையைத்தான் நன்கு விளக்குகிறது. அந்தத் தொகையே ஒரு கேலிக்குரல் அல்லது, ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்தை ஈட்டி முனைகொண்டு குத்துவதைப் போன்ற கிண்டல் வாசகம்! ஆனால், மறைமுகக் கேலி மட்டும் போதாது என்றோ என்னவோ, அமைச்சர் மாதவனார், நேர்முகக் கேலி ஒன்றையும் வீசியிருக்கிறார் சட்டசபையில். அந்த வாசகத்தை நினைத்துப் பார்த்தாலே நம் உள்ளம் திடுக்கிடுகிறது. மாதவனார் மொழிந்திருக்கிறார்:

"நாங்கள் ஆரம்ப ஆசிரியர்கட்கு அளிக்கும் ஊதியம் போதாது என்கிறார்கள் அவர்கள். அது அவர்களின் வாழ்க்கைக்குப் போதுமோ போதாதோ எனக்குத் தெரியாது. அந்த ஆசிரியர்களின் தகுதிக்கு அவ்வளவுதான் தர இயலும்,"

எவ்வளவு கொடுமையான வாசகம்! ஆரம்ப ஆசிரியர்கட்கு எத்தகைய பழிப்புரை! எவ்வளவு பெரிய அவமானத்தை அவர்கள் மீது எவ்வளவு எளிதிலே சுமத்துகிறார் மலையாள நாடு அளித்த மகத்தான மந்திரியார்!

அவர்கட்கு மாதந்தோறும் தரப்படும் ரூபா 37-லே, 19 பஞ்சப்படி! எனவே அது சம்பளத்தில் சேர்ந்ததல்ல. மிச்சமிருக்கும் 18 தான் சம்பளம் என்ற பெயரால் அவர்கள் பெறுவது. அமைச்சர் மாதவனார் அருள் சுரந்து கூறுகிறார், அந்த ஆசிரியர்களின் தகுதிக்கேற்ற சம்பளம் இந்தப் பதினெட்டு ரூபாய்தானென்று! ஆனால் அதே நேரத்தில், இந்த ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப்பள்ளிகளாக மாற்றினால், அப்போது தச்சுவேலை, நெசவு வேலை, தோல் வேலை முதலிய தொழில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாதம் 50 அல்லது 60-க்கு மேல் தரவேண்டியிருக்கிறது என்பதை ஏனோ மறந்து விட்டார் மாதவ மேனனார் அவர்கள்! மேற்குறிப்பிட்ட தச்சு, நெசவு, செருப்புத் தொழிலாளிகள் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 ரூபாய் சம்பாதிப்பதால், அவர்கள் பள்ளி ஆசிரியர்களாக ஆக முன்வந்தால் அவர்கட்கு அதே தொகையைத் தான் தர வேண்டியிருக்கிறது — தரத் தயாராகவும் இருக்கிறார்

(29-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீநிவாச இராமாநுஜன்

"எனக்கு இந்தக் கணக்கைக் கற்றுக்கொடு" இந்தக் கணக்கை முடிக்கும் வழியை எனக்குக் காட்டிக் கொடுக்க மாட்டாயா? இக்கணக்குகளை இவ்வளவு விரைவாகவும், சரியாகவும் நீ மட்டும் செய்துவிடுகின்றனையே, அது எப்படி" என்று இம்மாதிரியான கேள்விகளையும் வேண்டுதல்களையும் விடுத்துக் கொண்டு கும்பகோணத்தில் 'ஒரு சிறிய வீதியிலுள்ள ஒரு வீட்டின் திண்ணையருகே ஒரு சாளரத்தின் எதிரில் இளமாணவர்கள் சிலர்' குழுமியிருந்தனர்.

சாளரத்தின் உட்புற அறையில் மிக்க ஒல்லியாயும், பிரகாசத்துடன் ஜொலிக்கும் கண்களுடைய ஒருவாலிபனைக் கண்டு அவ்வண்ணம் கூறினார்.

அவ்வாலிபனும் அவர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தான். அந்த இளைஞன் தான் ஸ்ரீநிவாச இராமானுஜன். பிற்காலத்தில் கணித சாஸ்திரத்தில் உலகம் புகழும் மகா கணித சாஸ்திரியானான். இக்காட்சி இற்றைக்குச் சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அத்தகைய விஞ்ஞானி வறுமையிலும், பற்பல துன்பங்களுக்கிடையிலும் வாழ வேண்டி இருந்தது.

இராமானுஜன் கி.பி. 1887-ம் வருடம் டிசம்பர் மாதம் 22-ந் தேதி ஈரோட்டில் ஓர் எளிய வைணவ அந்தண குலத்தில் பிறந்தான். அவனது முழுப் பெயர் **ஸ்ரீநிவாச இராமாநுஜ அய்யங்கார்** என்பது. அவனது தாதையும் தந்தையும் ஜவுளி வியாபாரிகளிடம் குமாஸ்தா தொழில் செய்து ஊதியம் பெற்று வாழ்ந்தவர்கள். அவனது தாய் அவ்வூர் கோர்ட்டில் பெயிலிப் உத்தியோகஸ்தனது புத்திரியாவாள். கணித சாஸ்திரத்தின் ஞானம் அக்குடும்பத்தில் ஏற்படுவதற்குச் சிறிதும் கார

(28-பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அவர்கள். ஆனால் கலை அறிவு பயிற்றுவிக்கும் ஆரம்ப ஆசிரியர்கட்கு மட்டும் 18 ரூபாய் தான் தகுதிக்கேற்ற ஊதியம் என்று பேசுகிறார், என்ன வேடிக்கை!

இந்தக் கேலி வாசகத்தின் மூலம் ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்தை அமைச்சர் மாதவனார் அனாவசியமாகப் புண்படுத்தியிருப்பது, மன்னிக்க முடியாத குற்றம் என்பது நம் அழுத்தந் திருத்தமான கருத்து.

ணமே இல்லை. அவனுக்கு ஐந்தாம் ஆண்டு நிரம்பியதும் அவனை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலச் சேர்த்தனர். இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் டவுன் ஹைஸ்கூலில் மேற்கொண்டு கல்வி பயில விட்டனர். அதே பள்ளியில் அவன் நெடுகக் கல்வி கற்று வருவானாயினான்.

பள்ளியில் அவன் மிகச் சாதுவாயும், சிந்தனை மிக்கவனாயுமிருந்தான். அச்சிறு பிராயத்திலேயே அவன் நட்சத்திரங்களின் தூரத்தைப்பற்றிக் கேள்வி கேட்பானாம். அவன் வகுப்பில் முதல் ஸ்தானம் பெற்றிருந்ததால், மற்றப் பிள்ளைகள் அவன் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு. அவனது பெற்றோர்கள் அவனை வெளியே எங்கேனும் போக அனுமதியளிக்க மாட்டார்களென்பதை அவன் அறிந்துள்ளபடியால் ஜன்னலிலிருந்து வெளியேயுள்ள மாணவர்களுடன் அவன் பேசுவது வழக்கம்.

அவன் இரண்டாம் படிவத்தில் படிக்கும்போது கணிதத்தில் மிக்க தோர் உயர்ந்த உண்மையைத் தெரிந்துகொள்ள பேரவாக்கொண்டு தன்னிலும் மூத்த மாணவர்களைக் கேட்பானாம். மூன்றாம் படிவத்தில் அவன் இருக்கும்போது ஒரு நாள் அவனது உபாத்தியாயர் வகுப்பில் மாணவர்கட்குப் பின் வரும் விதம் கற்பித்தார். "எந்த எண்ணையும், அதே எண்ணால் வகுத்தால் ஒன்று என்ற விடைதான் வரும் என்று விளக்கிக் காட்டிக் கொண்டிருந்தார். அதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த இராமாநுஜன் எழுந்திருந்து, "ஐயா, சுன்னத்தைச் சுன்னத்தால் வகுத்தாலும் கூட அப்படித்தானோ?" என்று தைரியமாகக் கேட்டானாம். அச்சிறு பிராயத்திலேயே அவன் கணிதத்தில் அவ்வளவு முன்னேற்றமடைந்திருந்தான். நான்காம் படிவத்தில் திருக்கணிதம் பயிலத் தொடங்கினான். ஐந்தாம், ஆறும் படிவங்களில் பின்னும் உயர்ந்த ஞானம் பெற்றுவிட்டான். அவன் தான் கண்ட முடிவுகளைக் காகிதத்தில் எழுதிய பின்னர் அதைச் சுருட்டிக்கட்டி தன் வீட்டுக் கூரையில் சொருகி வைப்பான்.

பள்ளியில் இளமாணவனாக இருந்தபோது, அவன் கணித சாஸ்திரத்தில் பேரவாக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. பன்னிரண்டாம் வயது அவனுக்கு நடந்தபோது அவனது ஆசிரியர்கள் யாவரும் வியக்கத்தக்கபடி ஒருவரது உதவியுமில்லாமல் **லோனேயின்** திருக்கணிதம் என்ற நூலை அப்பியசித்தான். 1903-ல் ஆறும் படிவம் படிக்கும்போது அவனது நண்பர்களில் ஒருவன் **கார்** அவர்கள் எழுதிய

பரிசுத்தக் கணிதம் என்னும் புத்தகப்பிரதி யொன்றை அவனிடம் கொடுத்தான். இந்த நூல்தான் அவனுக்குக் கணிதத்தில் புலமையை அளித்தது. இந்தச் சமயத்தில் அவனுக்குப் பல புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்க அநேக சான்றுகள் கிடைத்தன. அம்முறையில் முயன்று உழைத்துத் தான்கண்ட முடிபுகளை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்தான். அதை அவன் கணிதவல்லுனரிடம் காண்பிப்பதும் வழக்கம்.

அவ்வருடம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி கும்பகோணம் காலேஜில் எப்-ஏ வகுப்பில் சேர்ந்தான். மாணவர்களில் சிறந்தவனாக இருந்தபடியால் அக்கலாசாலையில் சுப்ரமணிய உபகாரச் சம்பளம் பெற்றபின் அவனது முழுக்கவனமும் கணித சாஸ்திரத்தில் லயித்துப் போயிருந்தபடியால் வகுப்பில் என்ன பாடம் நடக்கிறதென்பதை அடியோடு மறந்து விடுவான். அவ்விதமான அதிகக் கவனம் மற்ற பாடங்களில் தேர்ச்சி பெற அவகாசமளிக்கவில்லை. ஆதலால், மேல் வகுப்பு மாறுவதற்கு முட்டுக்கட்டையாயிற்று. 1906-ல் சென்னைக்கு வந்து பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றான். 1907-ல் எப்.எ. பரீட்சைக்குப்போய் தவறிவிட்டான். அதன் பிறகு 1919-ம் ஆண்டு வரையில் அவனுக்கு ஒருவித வேலையும் இல்லை. ஆகவே கணித சாஸ்திரத்தைத் தன்னிச்சைப்படி கற்று வரலானான். அவன்தான் கண்ட முடிபுகளையும் சித்தாந்தங்களையும் ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டு வந்தான்.

1909-ம் வருஷம் கோடையில் அவனுக்கு விவாகம் நடந்தேறியது. அவன் இங்கும் அங்கும் அலைந்து திரிந்துக் கடைசியில் சென்னைத் துறைமுக உத்தியோக சாலையில் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் 1912-ம் ஆண்டு பிப்பரவரி 9-ந் தேதி வரையில் அமர்ந்திருந்தான். அதன் பின்பும் தனது தொழில் விட்டபாடில்லை. இந்திய கணித சங்கத்திற்குத் தனது கட்டுரைகளை விடாமல் தொடர்ந்து அனுப்பிக்கொண்டு வந்தான்.

1913-ம் ஆண்டு ஜனவரி 16-ந் தேதி தனது நண்பர்களில் சிலரது வேண்டுகோளுக்கிணங்கி அவன் கேம்பிரிட்ஜ் டிரினிடி காலேஜ் தலைவரான மிஸ்டர் ஹார்டி என்பவருக்குத் தனது கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் தெரிவித்தான். இராமானுஜத்தின் சாமர்த்தியத்தையும் நூல் ஞானத்தையும் அறிந்த ஹார்டி சேம்பிரிட்ஜ் கல்வியை அவனுக்கு அளிக்க முன்வந்தார்.

வெகு தூரத்திலுள்ள நெல்லூரில் கலெக்டர் ஆபிஸில் தற்காலிக குமாஸ்தாவாக இருந்தான். அப்போதும் அவன் கணிதத்தை விடவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான் அவன் கணித சாஸ்திர வல்லவர்களுடன் சம்பந்தப்பட்டான். நெல்லூர் கலெக்டரான **இராமச்சந்திரராவ்** அவர்கள் இராமானுஜத்துடன் முதன் முதலாக சம்பாஷித்த சம்பாஷணை மிக்க ருசிகரமானது. அது பின் வருமாறு :—"பல ஆண்டுகள் முன் எனது தமையன் மகன்-கணிதம் இன்னது என்று உணராதவன் என்னிடம் இவ்விதம் சொன்னான் :— "சிற்றப்பா! கணிதத்தைக் குறித்தே பேசும் ஒருவர் என்னிடம் இருக்கின்றார். அவர் என்ன சொல்கின்றார் என்பதை நான் அறியேன். தாங்களாவது அவர் சொல்வதில் ஏதேனும் பொருள் விளங்குகின்றதா என்று பார்ப்பீர்கள்" என்று சொல்வதைக் கேட்ட எனக்குக் கணிதம் என்றால் கனவிருப்பம் ஆகவே அவரைப்பார்க்க ஆவல் கொண்டு என்னிடம் வர அனுமதியுமளித்தேன். என் எதிரே குள்ளமாயும், பருத்தும், சிரைக்கப்படாத முகமும், குரூபமுடையவனுமானவன் வந்து நின்றான். ஆனால் அவனுக்குப் பிரகாசம் பொருந்திய கண்களிருந்தன. அவனுடைய கையில் ஒரு குறிப்புப் புத்தகம் இருந்தது. மிக்க ஏழ்மையான நிலைமையில் அவன் இருந்தபடியால் கணிதக் கலையை விருத்தி செய்து கொள்ள ஓய்வும் ஒரு வேளை ஆகாரமும் தனக்குக் கிடைத்தால் போதும் என்று அவரிடம் தெரிவித்தான்.

அவன் தன் புத்தகத்தை விரித்துத் தான் கண்டுபிடித்த விஷயங்களை விவரித்தான். எனக்கு அது ஒன்றும் விளங்கவில்லை. அவன் சொன்னது இன்னது என்பதே அவருக்குப் புலப்படவில்லை. மறுபடியும் இன்னொரு முறை என்னிடம் வரும்படிக் கேட்டுக் கொண்டேன். என்னுடைய அறியாமையை அவன் தெரிந்துகொண்டு அவன் மிக எளிய விஷயங்களை எனக்குத் தெரிவித்தான். அவன் சொல்லிய விஷயங்கள் அன்று வரையில் ஒருவராலும் கண்டுபிடிக்கப்பட்டவையல்ல. அது விஷயமாக எந்தப் புத்தகமும் வெளிவரவில்லை. அவன் மிகப் படித்தவன் சாமர்த்தியமுடையவன் என்று உணர்ந்தேன். அவனைப் பார்த்து "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டேன். அதற்கு அவன் தனக்குச் சிறிதளவு உணவும், கணிதம் அப்பியசிக்க உதவியும் தேவை என்றான்.

அதன் பிறகு இராமச்சந்திரராவ் இராமானுஜத்தைச் சென்னைக்கு அனுப்பினார். சென்னைத் துறைமுகத் தலைவ

ரான ஸர். பிரான்ஸிஸ் ஸ்பிரிங் அவர்களுக்குச் சிபார்சு செய்தார். கணித ஞானம் மிக்குடைய இராமாநுஜம் நகரத்தில் இருக்கத்தக்கவன். அவனிடம் தனிப்பட்ட அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உறுத்திக் கூறினர். இராமாநுஜம் சென்னைத் துறைமுக ஆபீஸில் வேலை பார்த்து வரும்போது, ஸிம்லாவிலிருந்து நட்சத்திரசாலைகளின் செயலாளர் டாக்டர் ஜி. டி. வாக்கர் அவர்கள் சென்னைத் துறைமுக ஆபீஸுக்கு விஜயம் செய்தார். அப்போது மிஸ்டர் ஸ்பிரிங் இராமாநுஜத்தின் சில புதிய விஷயங்களை வாக்கர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன் முடிவாக வாக்கர் 1913-ம் ஆண்டு பிப்ரவரி மீ 26-ந் தேதி சர்வகலாசாலைப் பதிவுத் தலைவர் அவர்களுக்கு ஒரு கடிதம் வரைந்தார். அது பின்வருமாறு :—

"சென்னைத் துறைமுக ஆபீசில் கணக்குப் பிரிவில் எஸ். இராமாநுஜம் என்னும் பெயருள்ள குமாஸ்தா ஒருவர் இருக்கிறார் என்பதை உமது கவனத்திற்குக் கொண்டுவர நான் மிகவும் மகிழ்வெய்துகிறேன். நான் அன்னவரைக் கண்ணிலுலும் பார்த்தவனல்ல. ஆயினும அவரது வேலைகளையும் நுட்பமான முடிவுகளையும் நான் நேற்று ஸ்பிரிங் அவர்களுடன் இருந்தபோது பார்த்து வியப்படைந்தேன். இவ்வளவுக்கும் அவரதுவயது இருபத்திரண்டென்று எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் கவனித்த வரையில் அவர் கண்ட உண்மைகள் கேம்ரிட்ஜ் கலாசாலையில் காணப்படும் முடிவுகளைப் போன்றிருக்கின்றன என்று என் மனத்திற்படுகின்றது. சர்வகலாசாலை அதிகாரிகள் அத்தகைய இராமாநுஜனை சில வருஷகாலமாவது கணித சாஸ்திர ஆராய்ச்சி செய்ய அவருக்கு ஜீவனோபாயத்திற்கு உபகாரமளிக்க வேண்டும்" என்று எழுதினர்.

சர்வகலாசாலை அங்கத்தினர் ஆலோசனை செய்து தனியாக மாதம் 75 ரூபாய் உபகாரச் சம்பளம் இரண்டு வருஷங்களுக்குக் கொடுக்க முன் வந்தார்கள். அந்தத் தொகை அவனுக்குப் போதுமானதாக இருந்தபடியால் களிப்புடன் தன் கலையில் கருத்தூன்றி பயின்று முன்னேறி வந்தான். 1913-ம் ஆண்டு மே முதல் குமாஸ்தா வேலையினின்றும் நீங்கி கணிதஞான சாஸ்திரியாக விளக்கினன்.

அவனது நண்பர்கள் இராமாநுஜத்தை இங்கிலாந்துசென்று கணிதத்தில் அபிவிருத்தி அடைய வற்புறுத்தினர்கள். ஆனல் இராமாநுஜம் மதப் பிரஷ்டம் ஆக விரும்பாததால் மறுத்தான். கணிதப் பேராசிரியரான ஸ்ரீமான் சேஷு அய்

யர் போன்றவர்கள் இராமாநுஜனை இங்கிலாந்து செல்ல இங்கிதமாகக் கேட்டுக்கொண்டனர். அதன்பின்னரே அவன் இங்கிலாந்து செல்ல இணங்கினான்.

இராமாநுஜன் இங்கிலாந்து செல்வதற்கு முன்னர் மிஸ்டர். ஹார்டி அவர்கட்கு 1913 ஜனவரி 16வ என்று தேதியிட்ட கடிதம் ஒன்றை எழுதினான். அது வருமாறு அதன் சில பகுதியைக் கீழே காண்க :—

"எனக்குச் சர்வகலாசாலைக் கல்வி கிடையாது. ஆனால் சாதாரண உயர்தரப் பள்ளிப் படிப்பே எனக்குண்டு. பள்ளியை விட்டபின் எனக்குள்ள அவகாச நேரத்தைக் கணிதம் பயின்று வருகின்றேன்.

(Divergent Series) வரிசை என்பதில் ஒரு விசேஷ சர்ச்சை செய்துள்ளேன்....... சமீபகாலத்தில் தாங்கள் பிரசுரித்ததும் (Orders of Infinty) என்று பெயரிட்டுள்ள கட்டுரையை நான் கண்டேன். அதன் 36-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்குக் கீழாக பகாக் குணங்கங்கள் சரியாகக் கண்டுபிடிக்கப் படவில்லை என்று காணப்படுகிறது. நான் உண்மையான எண்ணிற்கு அநேகமாகச் சரியான எண்ணைக் கண்டுபிடித்திருக்கிறேன். பிழை மிகவும் அற்பமானது. சரி யென்றே ஒத்துக்கொள்ளக் கூடியது. நான் இத்துடன் அந்தக் கணக்கை அடக்கம் செய்துள்ளேன். அதைத் தாங்கள் பரிசோதனை செய்யும்படிக்கும் கேட்டுக் கொள்கின்றேன். நானோர் ஏழை. ஆனபடியினால் என்னால் அதைப் பிரசுரிக்க இயலாதவன். அது பயன்தரக் கூடிய தகைமைபெற்றிருப்பின் எனது சித்தாந்தங்களைப் பிரசுரிக்கும்படி இறைஞ்சுகின்றேன்..........

அவன் அனுப்பிய கடிதத்துடன் சுமார் நூறு கணித சித்தாந்தங்கள் அனுப்பப்பட்டன. கேம்ரிட்ஜ் கணிதப் பேராசிரியர்களின் கவனத்தை ஒவ்வொன்றும் கவர்ந்தது. மிஸ்டர் ஹார்டி இராமாநுஜம் விடுவித்த ஒவ்வொரு நுண்ணிய விஷயத்தைக் கண்டு மூக்கின் மேல் விரல் வைத்து வியந்தார். அவர் இராமாநுஜத்திற்கு ஒரு பதில் கடிதம் வரைந்திருந்தார். அதில் அவர் அநுதாபப்படுவதாகவும், ஊக்கப்படுத்தி இங்கிலாந்து வரும்படி ஆர்வத்துடன் அழைப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து 1913 பிப்பிரவரி 27-ந் தேதி இராமாநுஜம் ஒரு கடிதம் வரைந்தார். அதன் சாராம்சம் பின்வரும் விதம் :—

"எனது உழைப்புக்களை பரிவுடன் ஏற்றுக்கொள்வதால் நான் என் நண்பரில் ஒருவ

ரென்றே தங்களை மதிக்கின்றேன்". இஃதொன்றே என்னை அயல் நாடு செல்லப் போதுமான அழைப்பாகும். ஊக்கமும் ஆகும். என் மூளையைப் போஷிக்க எனக்கு ஆகாரம் தேவை. ஆம் இன்றியமையாது தேவை. இஃதொன்றே எனது பிரதான கவனிப்பு. தங்களிடமிருந்து ஆர்வம் மிகுந்த ஒரு லிகிதம் அனுப்பப்பட்டால் அதன் மூலம் இங்கு உபகாரச்சம்பளம் பெற எனக்கு உதவியாக இருக்கும்.

அவன் எண்ணியவாறே உபகாரச் சம்பளம் கிடைத்தது. 1914-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ந் தேதி இங்கிலாந்து செல்லப் பிரயாணமானான். சென்னைச் சர்வகலாசாலையினர் வருஷத்துக்கு 250 பவுன் வீதம் இரண்டு வருஷகாலத்திற்கு உபகாரச்சம்பளம் அளித்தனர். பின்பு இத்தொகை ஐந்து வருஷகாலத்திற்கு நீடிக்கப்பட்டது. அந்த உபகாரச் சம்பளத்தில் அறுபது ரூபாயை மாதாமாதம் தன்னுடைய தாயாருக்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்தான்.

கேம்ரிட்ஜில் காலம் கடத்தியது

ஏப்ரல் மாதத்தில் அவன் கேம்ரிட்ஜ் சென்று அடைந்தான். டிரனிடி காலேஜில் சேர்க்கப்பட்டான். அங்கு அவனது ஞானத்தின் சிறப்பைக்கண்டு பின்னும் அறுபது பவுன் அதிகமாக உபகாரச்சம்பளம் கொடுக்கப் பட்டது. மிஸ்டர்—ஹார்டி, மிஸ்டர்—லிட்டில்வுட் இவர்களது மேற்பார்வையிலும், சிட்சையிலும் அவன் மேன்மேலும் விருத்தி அடைந்து வந்தான். 1915-ம் ஆண்டு நவம்பர் 11-ந் தேதி மிஸ்டர்-ஹார்டி சென்னைச் சர்வகலாசாலைப் பதிவு செயலாளர் அவர்களுக்கு ஒரு கடிதம் வரைந்துள்ளார் :—

யுத்தத்தினால் இராமாநுஜம் மிகுதியும் இடர்ப்பட்டார். மிஸ்டர் லிட்டில்வுட் என்னுடன் கூட இருந்து கற்பிக்க வேண்டியவர் வெளியே போக நேர்ந்தபடியால் அத்தகைய பண்பட்ட சிறந்த மாணவனுக்கு ஒரு போதகன் போதவில்லை. ... தற்காலத்தில் மிகுந்து சிறந்த இந்திய கணிதன் அவன் ஒருவனேயாகும், என்று சொல்வது மிகையாகாது. விஷயத்தேர்ச்சியிலும் அதைசெய்யும் முறைகளிலும் அவன் எப்போதும் ஒருமாதிரியான ஆவேசத்துடனிருப்பான். ஆனால் அவனுக்கு விசேஷமான வரங்கள் உண்டு என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். நான் கண்டறிந்த கணித சாஸ்திரிகளில் விசேஷ சிறப்புடையவன் அவன் ஒருவனே.

இங்கிலாந்தில் கூட இராமாநுஜன் வைதீக வாழ்க்கையை மேற்கொண்டான். அத்தேசத்தின் சீதோஷ்ண நிலைமை அவனுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. அவன் உட்கொண்ட ஆகார நியமும் அவனது தேகத்துக்குக் கெடுதியை அளித்தது. 1917-மே மாதம் க்ஷயரோகத்தில் விழுந்தான். பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளிலும் சுகாதார ஸ்தலங்களிலும் கொண்டு போய் நிவாரணம் செய்து பார்த்தார்கள்.

நீர்மூழ்கிக் கப்பல்கள் நடமாடிய அந்த யுத்த காலத்தில் கடற்பிரயாணம் செய்வது உசிதமல்ல. ஆகவே 1918-ம் வருடம் மாரிக்காலம் வரையில் ஒவ்வொரு இடமாக மாறி வைத்தியம் செய்விக்கப்பட்டார். கொஞ்சம் குணமேற்பட்டது. அவனது மூளை எப்போதும் வேலை செய்து கொண்டே இருந்தது.

ஒரு சமயம் ஒருவர் ஆஸ்பத்திரியில் இராமாநுஜத்தைக் காணச் சென்றார். தற்செயலாகத்தான் 1729 எண்ணுள்ள மோட்டார்காரில் வந்ததாகச் சொன்னார். உடனே இராமாநுஜம் குதித்தெழுந்து 'என்! எனக்கு அந்த எண் தெரியுமே. அந்த எண்ணை இரண்டு விதங்களாக விவரிக்கலாமே! இரண்டு கனங்களின் கூட்டுத் தொகை,' என்று உரத்துக் கூறினான்.

ராயல் சொஸைட்டி அங்கத்தினன்

உலக விஞ்ஞானிகள் இராமாநுஜத்தின் கணித சாஸ்திர மேன்மையையும் சித்தாந்தங்களையும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். அவனது முப்பத்தொன்றாம் வயதில் மிக்க இளம் பிராயத்திலேயே — 1918-ம் பிப்ரவரி 28-ந் தேதியன்று ராயல் சொஸைட்டியில் ஓர் அங்கத்தினனாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அத்தகைய கௌரவம் வகித்தவரில் அவன் தான் முதல்வன். அச்சிறு பிராயத்தில் அத்தகைய கௌரவம் வகிக்கக் காரணமாக இருந்தது அவனது ஞான விசேஷமேயாகுமன்றோ?

இதனால் ஊக்கமடைந்து அவன் அசௌக்கியமாய் நோயுற்றிருந்தாலும் தன் தொழிலை விடாது மிக்க அழகான முடிபுகளை எல்லாம் இக்காலத்தில் தான் கண்டு பிடித்தான். அதே வருஷம் அக்டோபர் 13-ந்தேதி கேம்பிரிட்ஜ் அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அப்போது அவனுக்கு நிபந்தனையில்லாமல் வருஷம் 250 பவுன் பரிசு கொடுக்கப்பட்டது. இந்தத் தேர்தலைப் பகிரங்கம் செய்யும் போது மிஸ்டர்-ஹார்டி சென்னைச் சர்வகலாசாலை பதிவு

செயலாளருக்கு எழுதியதாவது :—

"இதற்கு முன் எந்த இந்தியனும் பெற்றிராத சாஸ்திர ஆராய்ச்சியையும் புகழையும் வகித்து அவன் இந்தியா திரும்பு வருகின்றான். அவன் ஒருபொக்கிஷம்; இந்தியாவும் அவனைப் பொக்கிஷம் என்றே கருதவேண்டும், என்று நான் உறுதியாக நம்பியிருக்கின்றேன்.

இந்தியா திரும்புதலும் மறைவும்

இராமாநுஜத்துக்குப் புகழும் பெருமையும் அதிகரிக்க அவனது ஆயுள் காலம் குறைந்து கொண்டே போயிற்று. அவன் நோய் வாய்ப்பட்டு வருந்தினான். இங்கிலாந்தின் சீதோஷ்ண நிலைமை அவனது நோய்க்கு ஒத்திருக்கவில்லை. ஆகவே, அவன் இந்தியாவுக்கு உடனே திரும்பிப் போகவேண்டும்; அதுதான் நல்லது, என்று கருதப்பட்டது. 1919- பிப்பிரவரி 27-ந் தேதி இங்கிலாந்தை விட்டுக் கப்பலேறி ஒரு மாதம் சென்று மார்ச்சு 27-ந் தேதி பம்பாய் வந்து சேர்ந்தான். அவனது நோய் சற்றும் குணப்படவில்லை. எத்தனையோ வைத்திய சிகிச்சைகள் கொடுத்தும் ஒரு பயனுமில்லை. நாளாக நாளாக தேகம் மெலிந்து சென்னையில் சேத்துப்பட்டில் 1920-ஏப்ரல் 26-ந்தேதி மரணமானான்.

இவ்வாறாக இந்தியாவின் மலர் அரும்பி வெகு விரைவில் வாடிப்போய் விட்டது. அவனது நூதன கண்டுபிடிப்புகளிருந்தாலும் அவன் அகம்பாவமற்றும், மரியாதையுடனும், தன்மையுடனும் இருந்தான். அவனைக் குறித்து மிஸ்டர், ஹார்டி எழுதியது பின் வருமாறு :—தற்காலத்திய இந்திய கணித சாஸ்திரிகளில் மிகச் சிறந்தவன் அவன் என்று சொல்வது மிகையாகாது. அவன் தன் விஷயத்தேர்ச்சியிலும் அதை முடிக்கும் முறைகளிலும் அவன் ஆவேசம் கொண்ட மாதிரித்தோன்றுவான். அவன் விசேஷவரம் பெற்றவன் என்பதில் சற்றும் ஐயமில்லை. இன்னும் நான் அறிந்த சாஸ்திரிகளில் மிகச் சிறந்தவன் அவனேயாகும். அவன் அடைந்த வெற்றிகளால் அவன் சிறிதும் பெருமை பாராட்டியவனல்ல.

தென்னார்க்காடு மாவட்டத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்

2-வது மாநாடு, பண்ணுருட்டி
(19—2—50)

19-2-'50 ஞாயிற்றுக்கிழமை மாநாட்டுத் தலைவர்

திரு. இராம மீனாட்சி சுந்தரம் எம். ஏ.

அவர்களின் தலைமையில், கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தாலுக்கா யூனியன்களையும் ஒன்றுபடுத்தும், ஜில்லா சம்மேளனம் அமைக்க அங்கீகாரம் கொடுக்கவேண்டும் என்பது.

2. ஆசிரியர் வேலாயுதம் கொலை வழக்கை அரசாங்கத்தார் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நியாயம் வழங்க வேண்டும் என்பது.

3. **4-9-39**க்கு முன்னுள்ள ஆசிரியர்களுக்கும், இதர சர்க்கார் சிப்பந்திகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கும் லீவு சலுகைகள் **4-9-33**க்கு முன்வந்துள்ள ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி லீவு சம்பந்தமான சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்பது.

4. **15** வருஷகாலம் ஆரம்ப ஆசிரியர்களாக இருந்து, அனுபவம் பெற்றுள்ள செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு, டிப்டி இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கொடுத்து வருவதானது பூரண அளவு அமுலுக்கு வராதிருப்பதால் அவ்விஷயத்தை நினைவூட்டியும், மேற்கொண்டு எலிமெண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் அத்தகைய சலுகையைக் காட்ட, ஒரு பொதுப் பரீக்ஷை வைத்து அதில் தேர்ச்சி பெற்றுள்ள எலிமெண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும், டிப்டி இன்ஸ்பெக்டர்கள் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்பது.

5. எதிர்காலத்தில் டிப்டி இன்ஸ்பெக்டர் உத்தியோகங்களுக்கு நேரடியாக அனுபவமில்லாதவர்களை நியமிக்காமல், கல்வித் துறையில் போதுமான அனுபவமுள்ளவர்களாயும், ஆரம்ப ஆசிரியர்களாக இருந்து அனுபவம் வாய்ந்தவர்களையே டிப்டி இன்ஸ்பெக்டராக நியமிக்கவேண்டுமென்பது.

6. கல்வி அபிவிருத்தியில் ஊக்கங் கொண்டுள்ள குடியாட்சி சர்க்கார், ஆரம்ப ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் உயர்நிலைப் படிப்பு படிக்க விரும்புகிறவரையும், சம்பள மின்றியும், புத்தக அலவன்சுடனும் படிக்க வசதி அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. S. S. L. C. பரீக்ஷையில் தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்களை நேரடியாக செக்கண்டரி கிரேட் சர்ட்டிபிகேட் பெற்றுள்ள ஆசிரியர்களாக பாவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. (லோயர் கிரேடிலிருந்து ஹையர் கிரேடுக்கு மாற்றியது போல்)

8. 21-7-51க்குள் வேலைப் பயிற்சி யோக்யதாம்சம் பெறுவிடில் சம்பள உயர்வு நிறுத்தப்படும் என்கிற உத்தரவினால் 40 வயதிற்கும் 20 வருஷ சர்வீசுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களைப் பாதிக்கப்படாமல் இருக்க விலக்கு அளிக்க வேண்டுமென்பது.

9. மேஜர் பஞ்சாயத்திலும் அதற்கு மேம்பட்ட நகர பிரதேசத்திலும் எய்டெட் பாடசாலை கட்டிட வாடகை அதிகமாக கொடுக்கவேண்டியிருப்பதால் (Maintainance grant) 15 சதவிகிதம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்பது.

10. திரவிய சகாய பாடசாலைகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் ஒரு மானேஜ்மெண்ட் பாடசாலையிலிருந்து மற்றொரு மானேஜ்மெண்ட் பாடசாலையில் வேலைசெய்ய நேர்ந்தால், அத்தகைய ஆசிரியர்களுக்கும் பிரிவிலேஜ் லீவ் தொடர்ந்து அடையும்படி உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்பது.

11. ஆரம்பப் பாடசாலைகளின் பாட புத்தகங்களை அங்கீகரிக்கும்படி ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன்கள் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

12. கட்டாய கல்வி பிரதேசத்தில் எழுத்து வேலை அதிகமாக இருப்பதால், குறைந்தபக்ஷம் ஏழு ஆசிரியர்கள் வேலைசெய்யும் பாடசாலைகளுக்கு (Additiotnal Teacher) நியமித்துக் கொள்ள உத்திரவாக வேண்டுமென்பது.

13. பெண் ஆசிரியர்களுக்கு பிரசவ லீவை இரண்டு மாதத்திலிருந்து மூன்று மாதமாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்பது.

14. மாதாந்திர கிராண்டு பெயரளவில் இருந்துவருவதால் பிரதி மாதமும் 10-ம் தேதிக்குள் மாதாந்திர கிராண்டு கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பது.

15. 200 ரூபாய்க்கு மேற்பட்ட மாதாந்திர கிராண்டை பெறும் பாடசாலைகளுக்கு சம்பள பில்லாக அனுப்பிவைக்க வேண்டுமென்பது.

16. அரசியலார் சர்வீசிலிருந்து (Retire) ஆகி ஸ்தல ஸ்தாபன சர்வீசுக்கோ, மானேஜ்மெண்ட் சர்வீசுக்கோ, வந்துள்ளவர்களாகிய ஆசிரியர்களுக்கு அவரது முன் சர்வீசை அனுசரித்து (Maximum) சம்பளம் அளிக்கவேண்டுமென்பது.

17. ஒவ்வொரு ஆதாரக் கல்வி பாடசாலைகளையும், ஆதாரக் கல்வி சங்கத்தாரே ஏற்று நடத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

18. பிரைவேட்டாக மாணவர்கள் E. S. L. C. பரீக்ஷைக்குச் செல்ல சர்க்கார் அனுமதி இருப்பதுபோல S. S. L. Cக்கும் செல்ல அனுமதி கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

19. குடியரசு நிர்வாக சபைகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் அடைய வசதி அளிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

20. எதிர்காலத்தில் கல்வி திட்டத்தில் அபிவிருத்தி காணுவதற்கு பாடசாலைகளை கூட்டுறவு நிர்வாக பாடசாலைகளாக மாற்றியமைக்க வேண்டுமென்பது.

21. வட்ட கண்காணிப்பவர்களின் ஒருதலைப்பட்ட, ரிப்போர்ட்டின் பேரில் ஆசிரியர்களின் இன்கிரிமெண்டை நிறுத்த சிபார்சு செய்யாது, இருதரப்பாரின் முடிவான விசாரணையின் பேரில் எடுத்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஸ்தலஸ்தாபன நிர்வாகிகளை கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள்

1. தென்னாற்காடு ஜில்லா போர்டார் நடைமுதல் வருஷத்தில் (1949-1950)ல் சனிக்கிழமை முற்பகல் அரைநாள் பாடசாலை நாளாக வைத்திருப்பது, பிள்ளைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்களுக்கு பயனளிக்காத முறையில் இருப்

ப்தால், அடுத்து வருகிற பாடசாலை வருஷ முதற்கொண்டு. ரத்து செய்து, சனிக்கிழமை முழுமையும் வார விடுமுறை யாக இருக்கும்படி அனுமதிக்க வேண்டுமென்பது.

தென்னாற்காடு ஜில்லா போர்ட் பாடசாலைகளில் சர்க்கார் திட்டத்திற்கு மேம்பட்டு 1-க்கு ½ மணிநேரம் அதிகமாக வேலை செய்யப்பட்டு வருவதை ரத்து செய்து, சர்க்கார் திட்டப்படி நாள் 1-க்கு 5 மணிநேரம் வேலைசெய்ய உத்திரவு பிறப்பிக்க வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர்கள் மாறுதல் விஷயமாயும் பாடசாலைகளின் அபிவிருத்தி விஷயமாகவும் கவனம் செலுத்தி சர்க்கார் அவர்கள் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் Memo No. 11550 B 49-3 (21-8-49)வை அமுலுக்கு கொண்டுவரும்படியும், ஆசிரியர்களுக்கு வசதியளித்து ஊக்கமுண்டாக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சர்க்கார் காரியாலயம் ஸ்தல ஸ்தாபன காரியாலயம் இவைகளில் வேலைசெய்யும் அதிகாரிகள், குமாஸ்தாக்கள் இவர்களைவிட ஆசிரியர்கள் பல துறைகளில் வேலைகளில் பொறுப்பும் சம்பளக் குறைவாக இருந்தபோதிலும் மேல்கண்டவர்களைப் போல பிரதி மாதம் 1-ம் தேதியன்று சம்பளம் பெற வசதிகள் இல்லாவிட்டாலும், கிராமாந்திரங்களில் ஆசிரியர்கள் நாணயத்தை காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருப்பதால், பிரதி மாதம் முதல் வாரத்திற்குள்ளாகவாவது சம்பளம் பெறுவதற்கு ஏறற்பாடு செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிரந்தர ஆசிரியர்களைப் போல, தற்கால ஆசிரியர்களுக்கு (Journey) பிரயாண வர்த்தனையும் மாறுதல் காலங்களில் அனுமதிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஸ்தலஸ்தாபன உயர்நிலைப் பள்ளிகளிலும் மானேஜ்மெண்ட் சர்க்கார் பள்ளிகளிலும் வாசிக்கும்படி ஆசிரியர் பிள்ளைகளுக்கு தற்போது இருந்துவரும் அரைச் சம்பள சலுகையை, பாடசாலை தொடங்கிய மூன்று மாதகாலத்திற்குள் சாங்ஷன் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பிராவிடெண்ட் பண்ட் தொகையில் பெற்ற கடன் அடைந்த மறு மாதத்திலேயே, மீண்டும் மறு கடன் மறு மாதத்திலேயே சாங்ஷன் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது

8. தலைமை ஆசிரியர்களுக்கு (Duty Allowance) கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. ஆசிரிய சங்கக்கூட்ட நாட்களையும் பாடசாலை வேலை செய்யும் நாட்களுடன் சேர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10. (Weightage) கொடுக்கப்படாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு உடனடியாக சாங்ஷன் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11. அமாவாசை, கிருத்திகை தினங்களில் 1 மணி நேரத்திற்குப் பிறகு பாடசாலை தொடங்க அனுமதிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

12. தபால் செலவு கட்டணங்களை உயர்த்திக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

13. புகார் பெட்டிஷன்கள் பேரில் நேர் முறை விசாரணையின்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14. ஜில்லா போர்டில் வேலை பார்க்கும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கே, ஜில்லாபோர்ட் அலுவலகத்தில் ஏற்படும் காலிஸ்தானத்தில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கே முதல் சலுகை கொடுத்து ஆதரிக்கவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

15. ரேஷன் கடைகளில் ஆசிரியர்கள் வாரம் வாரம் ரேஷன் வாங்குவதற்கு வசதிகள் இல்லாமையால், மொத்தமாக ஒரு மாதத்திற்கு வேண்டிய ரேஷனை ஒரே தடவையில் பெற்றுக்கொள்ள உத்தரவு அளிக்கவேண்டுமாய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கிறது.

செயலாளர்கள்:

G. அரங்கநாதன்,

கே. வி. கோவிந்தசாமி.

ஆசிரியர்கள் சம்பள உயர்வு பிரச்னை

ஆசிரியர்கள் சம்பள உயர்வு பற்றி சர்க்காருக்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன என்றும். இவற்றை சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர் என்றும் இன்று அஸெம்பிளியில் பீகம் சுல்தான் அம்ருதீன் கேள்விக்கு பதிலளிக்கையில் மந்திரி ஸ்ரீ கே. மாதவமேனன் தெரிவித்தார்.

மேலும் கேள்விக்கு பதிலளிக்கையில்: கீழ்தர ஆரம்ப ஆசிரியர்களுக்கு ரூ 18 சம்பளமும், ரூ19 பஞ்சப்படியும் தரப்படுகின்றன என்றும், இதைவிட மோசமான நிலையிலிருப்பவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இவர்கள் தேவலை என்றுதான் சொல்ல முடியுமென்றும் மந்திரி கூறினார்.

சம்பள, பஞ்சப்படி உயர்வு, தங்கள் குழந்தைகளுக்கு, கல்வி வசதி, போன்ற பிராவிடென்ட் நிதி இரட்டிப்புப் போன்ற பல கோரிக்கைகள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன என்று ஸ்ரீ ஆர். வி. சுவாமி நாதன் கேள்விக்கு பதிலளிக்கையில் மந்திரி தெரிவித்தார்.

உபாத்தியாயர்களுக்கு ரூ 5 அதிகம் தரவேண்டுமென்ற சர்க்கார் உத்திரவுப்படி நூற்றில் 60 பள்ளிக்கூடநிர்வாகிகளே நடந்திருக்கின்றனர் என்றும், இந்தப் பணம் தராத நிர்வாகிகள் மீது நடவடிக்கை யெடுக்க விதிகளில் இடமில்லையென்றும், பள்ளிக்கூட அங்கீகாரத்தை வேண்டுமானால் ரத்து செய்யலாமென்றும், இது வியாதியை விட மோசமான சிகிச்சை யென்றும் மந்திரி தெரிவித்தார்.

ஸ்ரீகோதாரி: மதுவிலக்கை தளர்த்தி தேவையான பணத்தைப் பெற்று ஆசிரியர்கள் சம்பள விஷயத்தை சர்க்கார் கவனிக்குமா?

மந்திரி: அங்கத்தினர் கருத்து எப்படி இருந்த போதிலும், இப்படி நாங்கள் செய்ய மாட்டோம். மதுவிலக்கை தளர்த்த முடியாது.

மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ரூ5 தருவது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறதென்றும், இத்தொகை முழுவதையுமோ, பகுதியையோ கொடுக்கலாமா என்பதே சர்க்கார் பரிசீலனையில் இருந்து வருகிறதென்றும், மந்திரி அறிவித்து, இது பற்றி நிர்ணயமாக கேட்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ ஏ.வேதாரத்னம் பிள்ளை. சம்பள உயர்வை அணா 8 லிருந்து ரூ 1 ஆக்குவது பற்றி சர்க்கார் கவனிக்குமா?

(45 -ம் பக்கம் பார்க்க)

கேட்கவேண்டிய கேள்விகள்

1. எய்டட் பாடசாலைகளுக்கு எத்தனை சதவிகிதம் நிர்வாக கிராண்டு கொடுக்கப்படுகிறது?

2. நிர்வாக செலவு கணக்கில் எந்தெந்த அம்சங்களை சேர்த்துக் கொள்ளலாமென்று அரசியலாரின் நிரந்தரமான உத்தரவுகள் ஏதாவது இருக்கிறதா?

3. எந்தவிதமான எய்டட் பாடசாலைகளுக்கு நிர்வாக கிராண்டு கொடுக்கப்படுகிறது?

4. ஆசிரியர்களுக்கு அதிகப்படியாக மாதம் ரூ. 5/ நிர்வாகிகள் கொடுக்கும் தொகை நிர்வாகச் செலவில் சேர்க்கப்படுகிறதா?

5. அப்படி அனுமதிக்கப்படாவிட்டால் ஏன் அனுமதிக்கப்படக் கூடாது?

6. அப்படி அனுமதிக்கப்படாவிட்டால் நிர்வாகிகள் இனி ஆசிரியர்களுக்கு எவ்விதம் ரூ. 5/ உயர்த்திக் கொடுக்க முடியும்?

7. அப்படி அனுமதிக்கப்படாத தகவலை பாடசாலை நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்பட்டதா?

8. ரூ. 5/- சேர்த்துக்கொண்டு நிர்வாகச் செலவில் துண்டு விழுந்த தொகையை மானேஜ்மெண்டுகளுக்கு அரசியலார் கொடுக்க உத்தரவிடுவார்களா?

9. சென்னை மாகாணத்தில் எய்டட் பாடசாலைகளில் எண்ணிக்கை எத்தனை என்பதையும் அதில் லோயர் கிரேட், ஹையர் கிரேட், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் எய்டட் பாடசாலைகளில் மட்டும் எத்தனை பேர் வேலைசெய்கிறார்கள் என்பதையும் அரசாங்கம் தெரிவிக்குமா?

10. எத்தனை எய்டட் பாடசாலைகளில் ரூ. 5/ அதிகப்படியாக நிர்வாகிகள் மாகாணத்தில் சேர்த்துத் தருகிறார்கள்? ஜில்லா வாரியாக புள்ளி விவரம் கொடுக்க.

11. எய்டட் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு ரூ. 5/-வது உயர்த்திக் கொடுத்தால் வருடத்திற்கு எவ்வளவு அதிகச செலவாகும்.

12. 1950—51க்கு ஆசிரியர்களுக்கு ஏதாவது அதிகப்படுத்திக் கொடுக்க அரசியலார் பட்ஜட்டில் பணம் ஒதுக்கியிருக்கிறார்களா?

13. சென்னையில் 1950 ஜனவரி 18-ம் தேதி எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 5/- உயர்த்திக் கொடுப்பதாக ஓர் அறிக்கை வெளியானது உண்மைதானா? 27-1-50ல் சென்னையில் பேசிய கூட்டத்தில் ஆரம்பாசிரியர்களின் சம்பளத்தை ரூ. 25லிருந்து ரூ. 30 ஆக உயர்த்திக்கொடுக்க வேண்டிய யோசனையைத்தான் கவனித்து வருவதாக கல்வி மந்திரி பேசியது உண்மைதானா?

இம்மாதிரி பல கேள்விகள் சில ஆசிரியர்கள் நமக்கு அனுப்பியிருக்கின்றார்கள். இதற்கு கூடுமானவரையில் (நிலையில்லா நிர்வாக கிராண்டு) என்ற தலைப்பில் பதில் கூறியுள்ளோம். வாசித்துப்பார்க்க.

(43-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி. ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்கள் சம்பள உயர்வுப்படி இதையும் செய்ய முயற்சிக்கிறோம்.

ஹையர்கிரேடு உபாத்தியார்களுக்கு ரூ. 12-லிருந்து ரூ. 25-க்கு சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், இதற்கு மேல் ரூ. 5 தர வேண்டுமென பள்ளிக்கூட நிர்வாகிகளை சர்க்கார் கேட்டுக் கொண்டதென்றும், இதன்படி சிலர் நடக்கவில்லை யென்றும், இந்த ரூ. 5ஐ தாங்களே தந்து விடலாமா என்பது பற்றி சர்க்கார் யோசித்து வருகிறதென்றும் மந்திரி கூறினார்.

"ஆரம்பக் கல்வி" இனும்

ஒன்று முதல் ஐந்தாம வகுப்பு வரையில், எமது "புது முறை சங்க வாசகங்களை" பாட புத்தகங்களாக வைத்து ஆதரிக்கும் எய்டெட் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி" மாதப் பத்திரிகையை இனமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப் படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ் குறித்துள்ள அளவுக்கு தபால் ஸ்டாம்புகளை (Postage Stamps) வாங்கி கவரில் வைத்து அனுப்பவும். புத்தகங்களை இனமாக (Book Post)ல் அனுப்பப்படும்.

ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டிய தொகை

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	3	25-4-'44
இரண்டாம் வகுப்பு	0	5	0	5	14-5-'46
மூன்றும் வகுப்பு	0	7	0	5	20-5-'47
நான்காம் வகுப்பு	0	8	0	8	1-6-'48
ஐந்தாம் வகுப்பு	0	9	0	8	1-6-'48

இந்த ஐந்து புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0-3-3 தபால் பில்லைகள் அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

பாலர் நல்ல கதைகள்					
நான்காம் வகுப்பு	0	5	0	7	20-5-'47
பாலர் கதா போதினி					
ஐந்தாம் வகுப்பு	0	5	0	7	20-5-'47

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0-1-9 தபால் பில்லைகள் வாங்கி அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

மூன்றும் வகுப்பு	0	5	0		
நான்காம்	0	7	0	4	14-5-'46
ஐந்தாம்	0	8	0	4	14-5'46

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0-1-9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0 5 0		
நான்காம் வகுப்பு	0 7 0	4	1-5-'45
ஐந்தாம் வகுப்பு	0 8 0	4	20-5-'47

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

Mother India English Reader First Primer 0 4 0

மேற்குறித்த 1 முதல் 5-வது வகுப்பு வரையில் எம்மிடத்திலுள்ள எல்லாப் பாடப் புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–8-0 தபால் பில்லைகள் அனுப்பி வைக்கவும்.

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு
(Higher Elementary Schools)

அனுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறும் வகுப்பு	0 12 0	2	27-12-'49
ஏழாம் வகுப்பு	0 12 0	2	27-12-'49
எட்டாம் வகுப்பு	0 12 0	2	27-12-'49
தென்னிந்திய பெருமக்கள் 6, 7, 8 வகுப்புக்களுக்கு	0 10 0		

இந்த நான்கு புத்தகங்களை மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–2–9 தபால் பில்லைகள் அனுப்பவும்.

ஆட்சி முறையும் உடல்நல முறையும்
Civics and Hygiene

ஆறும் வகுப்பு	0 9 0
ஏழாம் வகுப்பு	0 12 0

0–1–9 தபால் பில்லைகள் அனுப்பவும்

புத்தகம் வைத்துள்ள தோழர்களுக்கு

சென்ற வருடம் நமது பாட புத்தகங்களை வைத்து ஆதரித்து இனுமாக நமது "ஆரம்பக் கல்வியை" பெற்றுக் கொண்டு வரும் பாடசாலை தலைமை ஆசிரியர்களும், நிர்வாகிகளும், ஏப்ரல் 31-ம் தேதிக்குள், தாங்கள் இவ்வருடமும் 1950—1951 தொடர்ந்து வாசகங்களை வைத்துக் கொள்வதாக ஒரு கார்டு நமது காரியாலயத்திற்கு முன்னதாகவே எழுதிவிடும் படி கேட்டுக்கொள்ளுகிறோம். அதன்பிறகுதான் ஆரம்பக் கல்வி தொடர்ச்சியாக வரும்.

AMENDMENT TO RULES UNDER MADRAS ELEMENTARY EDUCATION ACT.

(G. O. No. 112. Education, 16th Jannuary 1950.)

AMENDMENT

In the said rules, under the heading 'Section 44—Compulsory Elementary Education,' to rule 5, the following Note shall be added, namely :—

" NOTE :– When an application for the issue of a record sheet is made after one year from the date of the pupil leaving the school, a fee of eight annas may be levied for the issue of the record sheet.

A fee of one rupee may be levied for the issue of a duplicate record sheet."

AMENDMENT TO RULES RELATING TO GRANT OF RECOGNITION AND AID TO ELEMENTARY SCHOOLS

(G. O. Ms. No. 649, Education, 1st March 1950)

AMENDMENT

Chapter II—Rules for aid—Teaching grants.

Insert the following as rule 20 :—

"The following persons shall be deemed to be trained teachers for the purposes of assessment of grant : –

(i) a teacher who holds a probationary teachers certificate which he has been unable to complete within the preseribed period ;

(ii) a teacher who has undergone training in a recognised training institution though he has failed in the Training - School Leaving Certificate Examination ;

(iii) an untrained secondar grade teacher as defined in rule 2 (IV) ; and

(iv) an untrained teacher of the collegiate grade.

NOTE:—The concession in tne case of untrained secondary grade teacher will hold good till 1st June 1950."

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வரியாக வசூலித்து வட நாட்டிற்கு போய்க்கொண்டிருக்கிறது. வருமான வரியில் ஓர் பகுதியையாவது மத்திய சர்க்காரிடத்திலிருந்து ஆரம்பக்கல்விக் கென ஓர் பகுதி வாங்கி ஆரம்பாசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வழி செய்ய வேண்டியது சென்னை ஆட்சியாளரின் பொறுப்பாகும். அப்படி பணம்தேடி கொடுக்க மனமில்லையென்றாலும், பாடசாலை நிர்வாகிகளை கண்ணியமான முறையில் நடத்தவும் இல்லை இந்த அரசாங்கத்தார். நிர்வாகிகளை ஏதோ வியாபாரத்திற்காக பாடசாலைகளை நடத்துவதாக எண்ணுகின்றார்களே யொழிய, நிர்வாகஸ்தர்களுடைய பொறுப்பு என்ன என்பதை இந்த அரசாங்கம் உணரவில்லை. உதாரணமாக நிர்வாக கிராண்டைப்பற்றி இது வரையில் ஒரு தெளிவான உத்தரவைப் பாடசாலை நிர்வாகிகளுக்கு அனுப்பி இருக்கிறார்களா? நிர்வாக முறை கணக்கிடுவதெப்படி? எத்தகைய செலவு இனங்களைச் சேர்த்துக் கொள்ளுவது? எந்தச் செலவுகளைச் சேர்க்கப் படாது என்ற தெளிவாக நிர்வாகிகளுக்கு அரசாங்கத்தார் அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா? அல்லது கல்வி அதிகாரிகளாவது ஓரளவு நன்றாக விளக்கி மானேஜர்களுக்கு தெளிவுபடுத்தினார்களா? சில பாடசாலைகளுக்கு ஐந்து சதவிகிதமும். பத்து சதவிகிதமும், நன்றாக வசூலாகும் பாட சாலைகளுக்குக்கூட பதினைந்து சதவீதம் கொடுக்கப்பட்டது - அந்த நிர்வாகிகள் கல்வி அதிகாரிகளுக்கு வேண்டியவர்களென்ற காரணத்தினால். அவர்கள் கணக்கு எந்த முறையில் பரிசீலனைச் செய்யப்பட்டது. எப்படி துண்டு விழுந்தது, ஒன்றுமே புரியவில்லை.

ஒரு ஜில்லாவில் ஆசிரியர்களுக்கு அதிகப்படியாகக் கொடுத்த ரூ. 5 செலவு கணக்கில் சேர்த்துக் கொண்டார்கள். மற்றொரு ஜில்லாவில் அதைச் சேர்க்க கல்வியதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள். இப்படி ரேஞ்சுக்கு ரேஞ்சு, ஜில்லாவிற்கு ஜில்லா மாறுபட்ட விதமாக இந்த நிர்வாக கிராண்டை நிர்வாகிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒருவித நிலையில்லாமல் நிர்வாக கிராண்டு தாறுமாறாகக் கொடுக்கப்பட்டால் நிர்வாகிகள் எப்படி பாடசாலை நிர்வாகத்தை நடத்த முடியும். ஆதலின் அரசாங்கத்தார் கல்வி இலாக்காவின் மூலம் ஓர் நிரந்தரமான சட்டதிட்டங்களை நிர்வாக கிராண்டு கொடுக்கும முறையை, நன்றாக விளக்கி நிர்வாகிகளுக்கு ஓர் சுற்றறிக்கை உடனடியாக அனுப்பவேண்டும். அப்படிச் செய்தால்தான் நிர்வாகிகள் நிரந்தரமாக பாடசாலைகளை நடத்தமுடியும். நிலையில்லாத நிர்வாக கிராண்டை நினைத்துக்

கொண்டு அதிகாரிகளின் தயவு தாட்சண்யத்திற்கு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தால் பாடசாலை நிர்வாகம் நிலையில்லாமல் திறமையற்றுத்தான் போகும். அனாவசியமாக கல்வி அதிகாரிகளுக்கும் நிர்வாகிகளிக்கும் பூசல்களும் சந்தேகங்களும் ஏற்படும். இத்தகைய குழப்பமான நிலையைப் போக்க கல்வி இலாக்கா அதிகாரிகளாவது விளக்கமான சுற்றறிக்கை நிர்வாகிகளுக்கு அனுப்புவதுதான் நலம். கல்வி அதிகாரிகளாவது கவனிப்பார்களாக.

ஏப்ரல் 1 ந் தேதி முதல் "உள்ளூர்" தபால்கள்

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து குறைந்த கட்டணங்களில் உள்ளூருக்குள்ளாகவே பட்டுவாடா செய்வதற்கான கவர்கள், கார்டுகள் ஆகியவற்றைத் தபால் பெட்டிகளில் போடலாம் என்று தபால்-தந்தி இலாகா டைரக்டர்-ஜெனரல் இன்று அறிவித்துள்ளார்.

கிராமாந்திரப் பகுதிகளில் "உள்ளூர்" என்பது ஒரே தபாலாபீஸின் கீழுள்ள பல வேறு கிராமங்களையும் குறிக்கும்.

நகரப் பிரதேசங்களில் "உள்ளூர்" என்பது முனிஸிபல் எல்லையை மட்டுமின்றி அருகிலுள்ள கிராமாந்தரப் பிரதேசங்களையும் குறிக்கும். உள்ளூர் தபால் எல்லைகள் எது வரை என்பதை நகரங்களிலுள்ள தபாலாபீசுகள் அறிவிக்கும்.

அரையணா தபால் - தலை பொறிக்கப்பட்ட தபால் கார்டுகள் கிடைக்க இன்னும் கொஞ்ச காலமாகும். எனவே ஜனங்கள் சாதாரண கார்டுகளில் அரையணா தபால் - தலையை ஒட்டி போஸ்ட் செய்யலாம்.

வெற்றுக் கார்டுகள் விலைக்குக் கிடைக்கும்

பொதுஜனங்களின் சவுகரியத்திற்காக காலணாவுக்கு 4 கார்டுகள் வீதம் வெற்றுக் கார்டுகள் தபாலாபீசில் கிடைக்கும். இவற்றை வாங்கி "உள்ளூர்" பட்டுவாடாவாயிருந்தால் அரையணா தபால் தலை ஒட்டித் தபாலில் போடலாம்.

உள்ளூர்க் கடிதங்களுக்காக ஓரணா தபால் தலை பொறிக்கப்பட்ட கவர்கள் வெளியிடும் உத்தேசமில்லை. எனவே எந்தக் கவரில் வேண்டுமானாலும் ஓரணா தபால் தலையை ஒட்டித் தபாலில் சேர்க்கலாம்.

AMENDMENTS TO MADRAS EDUCATIONAL RULES.

(G. O. Ms. No. 636, Education, 1st March 1950.)

In the Madras Educational Rules, for rule 10-A, the following rule shall be substituted, namely :—

" 10-A. No teacher who has completed the age of fifty-five years shall ordinarily be appointed or re-appointed to service except in schools under private management in which case the appointment or re-appointment shall be subject to the following conditions :—

(a) Such a teacher may until the completion of sixty years of age, be appointed or re-appointed, as the case may be, for a period of one year at a time.

(b) The appointment or re-appointment shall be made by an order in writing by the authority empowered in that behalf by the management concerned. The order shall state the period for which the appointment or re-appointment is made, the post or designation and the pay or scale of pay relating to the appointment or re-appointment.

(c) Except as regards the tenure and scale of pay, the terms and conditions of service shall be the same as for teachers permanently appointed in the schools.

(d) Such a teacher shall not, except with the special permission of the Director; be appointed as headmaster or headmistress unless the teacher had before the campletion of fifty-five years of age held that post in a school or has had executive experience in Government Service.

(e) Such a teacher may be paid a fixed pay or a scale of pay either of which shall not, except with the special permission of the Director, be higher tham that which would be granted to a teacher under fifty-five years of age appointed or promoted to the post in the school to which the appointment or re-appointment under this rule is made.

(f) In exceptional cases, the Director may permit a teacher over sixty yerrs of age to work in a school.

AMENDMENT TO RULES RELATING TO GRANT OF RECOGNITON AND AID. TO ELEMENTARY SCHOOLS

(G. O. Ms. No. 837, Education, 14th March 1950.)

AMENDMENT

Chapter II—Rules for Aid—Teaching grants—Rule 4 (4) Assessment of grant-The following shalil be added as a note rule 4 (4) :—

"In elementary school which have been imparting instruction in Urdu as the first language prior to 1948-49 and continue to do so since, grants moy be assessed up to the end of 1950-51 over what is admisssible under rule 4 (4) for an additional teacher or teachers if any, who are employed for the teaching of regional language in standards III to V provided the number of such teachers is considered necessary by the District Educational Officer with reference to the strength and attendance of the school."

(G: O. No. 336, Education, 8th February 1950)

DRAFT AMENDMENT.

In the said rules, for the rule under the heading "section 3 (xiii)—School-age," the following rule shall de substituted, namely :—

"School-age" means the period of life of a pupil from the date on which he or she attains the age of six until he or she has received elementary education up to and including Standard V of an elementary school or up to and including class V of a secondary school or until he or she attains the age of twelve, whichever is earlier :

Provided that the Director of Public Instruction may, with the approval of the Government of Madras prescribe for boys or girls of any particular community; limits of age different from those prescribed in this rule:

Provided also that for a period of six years commencing on the 1st August 1945 in respect of any area under the jurisdiction of a district board where compulsory elementary education is introduced on or after the date the upper age-limit shall be fourteen, in the case of a boy and twelve in the case of a girl.

Provided further that in no case shall a boy or a girl be compelled to attend school for more than six years in the aggregate during the school-age as defined above.

Explanation:—For the purposes of this rlue, a pupil attaining the age of six in the middle of a school-year shall be deemed to have attained that age only on the date on which admission can thereafter be normally made under rule 22 (a) of the rules rlating to the grant of recogniten and aid tc elementary schools and a pupil undergoing instruction attaininq the upper age-limit in the course of the chool-year shall be deemed to be within the school-age until the end of that school-year."

இந்த கெஜட்டின் தமிழ் மொழி பெயர்ப்பு மே இதழில் வெளிவரும்.

ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளில் 60 வயது வரையில் வேலை பார்க்கலாம்.

தனி மானேஜ்மெண்டு பள்ளிக்கூடங்களைப் போல ஸ்தல ஸ்தாபனங்களிலும் வயது காரணமாக பதவியிலிருந்து விலகியவர்களை 60 வயது வரை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ள சென்னை சர்க்கார் அனுமதியளித்துள்ளனர். இன்னும் ஐந்து வருஷங்களுக்கு இந்த எற்பாடு பரீட்சார்த்தமாக அமுலில் இருக்கும். அதன் பின்னர் நிலைமை மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

சர்க்கார் ஊழியர்களுக்கு புதிய பென்ஷன் திட்டம்

பிராவிடெண்ட்பண்டு, இன்ஷ்யூரென்ஸ் வசதிகளும் உண்டு

ஏப்ரல் 1-ந் தேதி முதல் புது திட்டம் அமுல்

உயர்தர சர்க்கார் ஊழியர்களுக்கு தற்சமயம் உள்ள பென்ஷன் முறைக்குப் பதிலாக, பென்ஷன் - பிராவிடெண்ட் பண்டு – இன்ஷ்யூரென்ஸ் வசதி யாகிய மூன்றும் சேர்ந்த புதிய திட்டத்தை 1950 ஏப்ரல் 1-ந் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வருமாறு சென்னை கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:—

இந்த புதிய திட்டத்தின் கீழ்வரும் சர்க்கார் ஊழியர்களுக்கு தற்போதைய விகிதத்தில பாதி, (சிவில் சர்விஸ் விதிகளின் 487-வது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி சராசரி வருமானத்தில் நால்பாகம்) பென்ஷனுகக் கொடுக்கப்படும். பென்ஷன் விகிதத்தில் குறையும் தொகை, சம்பளத்தில் ரூபாய்க்கு 9 பை வீதம் சர்க்கார் சேர்த்துக் கொடுக்கும் நிதியின் மூலம் ஈடு செய்யப்படும். பிராவிடெண்ட் பண்டுக்காக சர்க்கார் ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் ரூபாய்க்கு 1 அணுவாவது செலுத்த வேண்டும்.

கட்டாய இன்ஷ்யூரென்ஸ் வசதி

புதிய திட்டத்தின்கீழ் சர்க்கார் ஊழியர்கள் தபால் இன்ஷ்யூரென்ஸிலோ தனிப்பட்ட இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளிலோ கீழ்க்கண்ட குறைந்த பக்ஷத் தொகைகளுக்கு இன்ஷ்யூர் செய்துகொள்ள வேண்டும்.

ரூ. 45-க்குக் குறைந்த சம்பளம் உள்ள உயர்தர சர்க்கார் ஊழியர்கள் ரூ.500-க்கு இன்ஷ்யூர் செய்துகொள்ளவேண்டும். ரூ. 45-க்கு மேல் ரூ. 90–க்கு மேற்படாமல் சம்பளம் வாங்குவோர் ரூ. 1000–க்கு இன்ஷ்யூர் செய்துகொள்ள வேண்டும். ரூ. 90-க்கு மேல் ரூ. 150-க்கு மேற்படாமல் சம்பளம் பெறுவோர் ரூ. 2000க்கு இன்ஷ்யூர் செய்து கொள்ள வேண்டும். ரூ. 150-க்கு மேல் ரூ. 250-க்கு மேற்படாமல் சம்பளம்வாங்குவோர் ரூ.3000க்கு இன்ஷ்யூர் செய்து கொள்ள வேண்டும். ரூ. 250–க்கு மேல் ரூ. 500 வரை சம்பளம் வாங்குவோர் ரூ. 5000த்திற்கு இன்ஷ்யூர் செய்துகொள்ள வேண்டும்.

10 வருஷ நிரந்தர சர்வீஸ் உள்ளவர்களுக்கு பழைய பென்ஷன் திட்டமே பிரயோகிக்கப்படும்.

புதிதாக சர்க்கார் உத்தியோகத்தில் நியமிக்கப்படும் அனைவருக்கும் புதிய திட்டம் கட்டாயமாகப்பிரயோகிக்கப்படும். இந்தத் திட்டம் சம்பந்தமான முழு விவரங்களும் கூடியசீக்கிரம் கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

கீழ்த்தர சர்க்கார் ஊழியர்களுக்கும் இதுபோன்ற ஒரு திட்டம் அமலுக்குக் கொண்டு வருவது பற்றி பின்னர் ஆலோசிக்கப்படும்.

ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் யோசனை

ஆசிரியர்களின் சம்பளவிகிதங்களை மாற்றுவது பற்றியும் அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் தருவது பற்றியும் சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும், இது சம்பந்தமாக தென் இந்திய ஆசிரியர் சங்கத் தலைவரும், ஆசிரியர் சமாஜத் தலைவரும் அடங்கிய நாது கோஷ்டி தன்னை பேட்டி கண்டதாகவும் கல்வி மந்திரி ஸ்ரீமாதவ மேனன் நேற்று அசெம்பிளியில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். இது சம்பந்தமாக இந்த பட்ஜெட் கூட்டத்திற்குள் சர்க்கார் தங்கள் முடிவைத் தெரிவிக்குமா என்று நாகப்பா கேட்டதற்கு ஒவ்வொரு வருஷம் சர்க்கார் ஏதாவது செய்துக்கொண்டுதான் இருக்கிறதென்றும் இன்னும் ஏதாவது அதிகமாக செய்ய முடியுமா என்று சர்க்கார் ஆலோசித்து வருகிறதென்றும் மந்திரி தெரிவித்தார்.

சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் கீழுள்ள பள்ளிகளிலும் வேறு ஆசிரியர்கள் கிடைக்காவிடில் 60 வயது வரை ஆசிரியரை வேலைக்கு வைத்துக்கொள்ளலாமென்று ஏற்கெனவே சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாக மந்திரி ஸ்ரீ மாதவமேனன் தெரிவித்தார்.

முதியோர் கல்வி பள்ளி ஆசிரியருக்கு போனஸ்

முதியோர் கல்விக்காக ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாய் ஆசிரியர்களுக்கு போனஸ் அளிக்கும்படி சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அறிவித்திருக்கின்றனர். ஒவ்வொரு வருஷமும் இவைகளில்படித்து எழுத்தறிவுபெறும் முதியோர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 வீதம் கணக்கிட்டு அதை ஆசிரியர்களுக்கு போனஸாக

அளிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. அவர்களுக்கு எழுத்தறிவு ஏற்பட்டுவிட்டதா என்பதை கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்கள் பரீட்சை செய்வார்கள். ஆசிரியர்களுக்குள்ள சம்பளந் தவிர இந்த போனஸ் அளிக்கப்பட வேண்டும். இதற்காகும் செலவை ஸ்தல ஸ்தாபனங்களில் ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாலு மாதங்களுக்குள் எழுத்தறிவு பெறும் முதியோர்கள் சம்பந்தமாகத்தான் இந்த போனஸ் அளிக்கப்படும்.

மெட்ரிகுலேஷன் தேர்வு விதிகளில் திருத்தம்

மெட்ரிகுலேஷன் (பரீட்சை) தேர்வு சம்பந்தமான சில விதிகளை சென்னை சர்வகலாசாலை சிண்டிகேட் திருத்தியுள்ளது. திருத்தப் பட்டுள்ள விதிகளின் படி 1. மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு சென்னை சர்வகலாசாலை அங்கீகரித்துள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதலாம். சென்னை கல்வி இலாகா டைரக்டர் ஒரு பள்ளிக்கூடத்தை அங்கீகரிக்கவில்லை என்றால் அந்தப் பள்ளிக்கூடம் மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பக் கூடாதென்று பழைய விதியில் கூற பட்டிருந்தது. (2) தேர்வு எழுதும் ஆண்டில் மார்ச் முதல் தேதியன்று மாணவர்களுக்கு 14 வயது நிறைந்து 3 மாதங்கள் ஆகியிருந்தால் தான் அவன் தேர்வுக்கு உட்காரலாம். 4-வது பாரத்தில் சேர்ந்ததைத் தொடர்ந்து குறைந்தது, 3 ஆண்டுகளாவது 1-வது உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்நிலைப்பள்ளியில் படித்திருக்க வேண்டும். ஆனால் கல்வி இலாகா டைரக்டரோ, அல்லது அவருக்கு சமமான அதிகாரியோ, அங்கீகரித்துள்ள பள்ளியிலிருந்து, டிரான்ஸ்வர் சர்டிபிகேட் பெற்றிருந்தால் அம்மாணவனைப் பள்ளிக்கூட ஆரம்பத்தில் 5-வது பாரத்திலோ, அல்லது 6-வது பாரத்திலோ, சேர்த்துக் கொள்ளலாம். எஸ். எஸ். எல். சி. பூர்த்தி செய்து ஒரு ஆண்டு கழித்துத்தான் யாரும் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதலாம்.

Printed and Publisled by P. Veeraraghavan in
Venkatesan Press, 94/95 New St. Mannady
G. T. Madras.